பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 09 செவ்வாய்க்கிழமை(25-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:362

## பிரதித் தேர்தல் ஆணையாளர் காலமானார்

கொழும்பு,நவ.25

பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.சி.அருந்தவச்செல்வன் நேற்றுக் காலை கொழும்பில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் காலமானார். இறக்கும் போது அவருக்கு 61 வயது.

யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக நீண்டகாலம் பணியாற்றிய அவர், பிரதித் தேர்தல் ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்று தேர்தல் ஆணையக தலைமை அலுவலகத்தில் பணியாற்றி வந்தார்.

வழமைபோல் கடந்த வெள்ளிக்கிழமை அவர் அலுவலகத்தில் பணி

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.25

மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகம் எங்கும் எழுச்சியுடன் ஆரம்பமாகின்றன. இதனையொட்டி. தமிழர் பகுதிகளெங்கும் மாவீரர்களின் உருவப்படங்களுடனான நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் மஞ்சள் சிவப்புக் கொடிகள், எழுச்சி வாசகங்கள் அடங்கிய பதாகைகள், நினைவு வளைவுகள் கட்டப்பட்டுள்ளன. அத்துடன், எழுச்சி கானங்களும் ஒலிக்கவிடப்பட்டுள்ளன.

மாவீரர் எழுச்சி நாள்களுக்கான நிகழ்வுகள் இன்று காலை ஆரம்பமாகின்றன. பொதுச்சுடரேற்றல், தேசியக்கொடி ஏற்றல், மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு ஈகச் சுடரேற்றல், மலர் அஞ்சலி மற்றும் அகவணக்கம் செய்தல், உறுதியுரை எடுத்தல், நினைவுரை வழங்கல் என்பன எழுச்சி நாள் நிகழ்வுகளில் மேற்கொள்ளப்படும்.

எழுச்சி நாள்களுக்கான நிகழ்வுகள் இன்று காலை 8மணிக்கு தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகின்றன.

மாவீரர் துயிலுமில்லங்களில் இன்று காலை 8 மணிக்கு ஏற்றப்படும் தேசியக்கொடி, நாளை மறுதினம் மாவீரர் நாள் நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் இறக்கப்படும்.

விடுதலைப் புலிகளின் பணிமனைகள் மற்றும் தளங்களில் இன்றும் நாளையும் காலையில் தேசியக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கிக் குழு இலங்கை வருகிறது

கொழும்பு,நவ.25

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் சேதமடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்களை மீள் கட்டுமானம் செய்வது குறித்து ஆராய உலகவங்கிக் குழு ஒன்று எதிர்வரும் ஜனவரி 19 ஆம் திகதி இலங்கைவரவிருக்கின்றது.

உலகவங்கியின் இலங்கைப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தப்பணிகளை மேற்கொள்ள

(16ஆம் பக்கம் பார்க்க)

### இரு தோணிகளில் கால்வைத்து இலக்கை அடைய முடியாது

# சமாதானப் பேச்சை உடனடியாக ஆரம்பிக்க அதனை ஒருவர் பொறுப்பேற்க வேண்டும்!

## ஜனாதிபதி, பிரதமர் இருவருக்கும் இரா. சம்பந்தன் அறிவுறுத்து

கொழும்பு,நவம்பர்25

**சமாதான பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். தனி அதிகாரத்துடன் ஒருவர் சமாதானப் பேச்சுக்களைப் பொறுப்பேற்கவேண்டும். அப்போதுதான் ஒரு தீர்வு ஏற்படும்.இரண்டு தோணிகளில் கால் வைத்து குறிப்பிட்ட இலக்கை அடையவே முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.**

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்ற போது உரையாற்றுகையில் இவ்வாறு கூறிய சம்பந்தன் எம்.பி. மேலும் காலம் கடத்தாமல் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் கோரினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஜனாதிபதியும், ஐக்கிய தேசிய முன்னணியினரும் விடுதலைப் புலிகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஆணையாளர் இன்று வருகிறார்



கொழும்பு, நவ.25

ஐரோப்பிய ஆணைக்குழுவின் வெளியுறவுக்கான ஆணையாளர் கிறிஸ் பெட்டன் இருநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார். அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் பல அமைச்சர்களையும் சந்திப்பார்

கிளிநொச்சிக்குச் செல்லும் அவர் விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் சந்திப்பார்.

தனது விஜயத்தை முன்னிட்டு விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில், இலங்கையின் சமாதான முயற்சிக்கான ஐரோப்பிய யூனியனின் தொடர்ச்சியான ஆதரவை வெளிப்படுத்துவதே இவ்விஜயத்தின் நோக்கம் என்று கிறிஸ் பெட்டன் தெரிவித்திருக்கிறார்.

### மடத்தடி விபத்தில் ட்ரக் சாரதிக்கு எதிராக

## ஒரு குற்றச்சாட்டுடன் மட்டும் தாக்கலான குற்றப்பத்திரம் நீதிமன்றால் நிராகரிப்பு!

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ். மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ ட்ரக் - மோட்டார் சைக்கிள் விபத்துடன் தொடர்புடைய ட்ரக் சாரதிக்கு எதிராக யாழ்.பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்ட - ஒரு குற்றம் மட்டுமே அடங்கிய - குற்றப்பத்திரத்தை யாழ். நீதிமன்றம் நிராகரித்தது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எழுப்பிய ஆட்சேபத்தை அடுத்தே இக்குற்றப்பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 3ஆம் திகதி இடம்பெற்ற இவ்விபத்துச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு யாழ். மேலதிக நீதிமன்றில் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது விபத்தைத் தடுக்கத் தவறியமை என்ற குற்றச்சாட்டின் பேரில் இராணுவ வாகனச் சாரதி மீது பொலீஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அப்போது பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். ரவிராஜ் அங்கு தெரிவிக்கையில் -

பிரஸ்தாப சாரதிக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்த இடமுண்டு. அக்குற்றச்சாட்டுக்களை பொலீஸார் குற்றப்பத்திரத்தில் சேர்க்கவேண்டும் என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ சிரேஷ்ட அதிகாரியாக கொட்டேகொட நேற்று பதவியேற்பு

கொழும்பு,நவ.25

இராணுவத்தின் சிரேஷ்ட தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட நேற்றுப் பதவியேற்றார்.

இதுவரை காலமும் அப்பதவியிலிருந்த மேஜர் ஜெனரல் லொஹான குணவர்த்தன நேற்று ஓய்வுபெற்றதை அடுத்து இப்பதவியை ஜெனரல் கொட்டேகொட ஏற்றுக்கொண்டார். இதையொட்டிய வைபவம் கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த வருட இறுதியிலும் இவ்வருட முற்பகுதியிலும் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின் போது அரசுத் தரப்புப் பேச்சுக் குழுவின் இராணுவ ஆலோசகராக பங்குபற்றியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தில் தற்போது தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு அடுத்த சிரேஷ்ட நிலையில் இருக்கும் ஜெனரல் கொட்டேகொடவும், ஜெனரல் பலகல்ல போன்று முன்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைமைப் பணிப்பாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீல.சு.க.-ஜே.வி.பி. கூட்டு முயற்சி ஜனாதிபதி தலைமையில் நேற்று ஆராய்வு

### ஆலோசனை வரைவை கட்சி அதிகார சபை ஏற்றது

ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக ஸ்ரீல.சு.கட்சி சார்பில் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான குழுவின் தயாரித்த திட்ட முன் வரைவை ஸ்ரீல. சு.கவின் அதிகார சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

ஸ்ரீல.சு.கவின் மத்திய குழுவின் அனுமதியுடன் கட்சித் தலைவியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கூடிய கட்சி அதிகாரசபை இந்தத் திட்ட முன்வரைவை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

இங்கு, ஜே.வி.பியுடனான கூட்டணியைத் தடுக்கும் நோக்குடன் ஜே.வி.பியுடனான பேச்சுக்களில் ஈடுபடும் ஸ்ரீல.சு. கட்சி உறுப்பினர்கள் தொடர்பாக - பிழையான - பிரசாரத்தை ஒரு சாரார் ஊடகங்களின் மூலம் மேற்கொள்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

ஜே.வி.பியுடனான அடுத்த சுற்றுப் பேச்சுக்களை இரு கட்சிகளும் ஏற்றுக்கொள்ளும் ஓர் ஒழுக்கக் கோவைக்கு அமைய நடத்துவது எனவும் -

இதுதொடர்பாக ஜே.வி.பிக்கு அறிவிப்பது எனவும் நேற்று முடிவு செய்யப்பட்டது.

## கிண்ணியாவில் கிரனேட் வீச்சு! 3 பேர் பலி; ஐந்து பேர் காயம்!!

### பொலீஸ், இராணுவப் பாதுகாப்பு அதிகரிப்பு

சீனன்குடா,நவ.25

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவில் நடைபெற்ற இரு வெவ்வேறு குண்டுத் தாக்குதல் சம்பவங்களில் மூவர் கொல்லப்பட்டனர். வேறு ஐந்து பேர் காயமடைந்தனர். அவர்கள் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கிண்ணியா கைஸல் நகரில் இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட கிரனேட் தாக்குதலில் எம்.மன்சூர் என்பவர் கொல்லப்பட்டார். ஜமால்தீன், இபுகான் ஆகிய இருவரும் காயமடைந்தனர். இவர்கள் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இச்சம்பவம் கடந்த ஞாயிறு இரவு 9 மணியளவில் நடைபெற்றது.

நேற்று திங்கள் அதிகாலை 2.30 மணியளவில் தம்புள்ளவிலிருந்து கிண்ணியாவுக்கு மரக்கறி ஏற்றிவந்த லொறி ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட மற்றொரு குண்டுத் தாக்குதலில் எம்.லாஹீர்(38), என்பவர் கொல்லப்பட்டார். டி.அஸாம்(34), எஸ்.மஜீப்(21), ஹிதாயத்துல்லா(30), ஜயூப் ஆகிய நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



மாவீரர் தினத்தை முன்னிட்டு நவிண்டில் தாமோதர வித்தியாலயத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்ட மாவீரர் வளைவை முதலாவது படத்திலும் எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முகப்பின் தோற்றத்தையும், மாவீரர் இல்லம் அலங்கரிக்கப்பட்டிருப்பதையும் இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம். *(படங்கள்: கரவெட்டி செய்தியாளர்)*

# மாவீரரின் பெற்றோரை கௌரவிக்க பல இடங்களிலும் விசேட ஏற்பாடு

வலி.வடக்கு, நவ.25

யாழ்.குடாநாட்டு மாவீரர் துயிலும் இல்லங்களில் நடுகைக்கல், வித்துடல்கள் உள்ளவர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்களையும் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களையும் கலந்துகொள்ளும்படி மாவீரர்நாள் ஏற்பாட்டுக்குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கோப்பாய் துயிலும் இல்லத்திற்கு உரியவர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றிலும் -

தீவுப்பகுதி துயிலும் இல்லத்தற்கு உரியவர்கள் சாட்டி மாதா கோயிலுக்கு அருகில் உள்ள பாடசாலையிலும் -

தென்மராட்சிப் பகுதி துயிலும் இல்லத்திற்கு உரியவர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் -

வடமராட்சிப் பகுதி துயிலும் இல்லத்திற்கு உரியவர்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் - கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவிப்புப் பெறுவோரை அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு முன்னர் தமக்குரிய கௌரவிக்கும் இடங்களில் ஒன்றுகூடுமாறும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பெற்றோர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச்செல்லப்படுவர். அங்கு பொதுச்சுடர் ஏற்றலைத் தொடர்ந்து, ஈகச்சுடர் ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மாவீரர்தின ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (எ-86-70)

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

கரவெட்டி,நவ.25

வடமராட்சியில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளன.

இன்று நண்பகல் 12 மணிக்கு வல்வெட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் பொலிகண்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் கற்கோவளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் தும்பளையில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஒ-70)

# கைதடி சிறுவர் இல்ல வழக்கு சக்திகிரீவன் நேற்று விடுதலை

## சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில்

யாழ்ப்பாணம், நவ.25

கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற முறைகேடான சம்பவங்கள் தொடர்பான வழக்கிலிருந்து இந்துசமயப் பேரவைச் செயலாளர் சி.சக்திகிரீவன் சாவகச்சேரி நீதிமன்றினால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

வழக்குடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளுக்கும் இவருக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்து சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் இவரை விடுதலை செய்தார்.

இந்த வழக்கில் இருந்து இவரை விடுவிப்பதற்கான பணிப் புரையை சட்டமா அதிபர் கே.ஸி. கமலசபேசன் சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு விடுத்திருந்தார். அத்துடன், தாம் சக்திகிரீவனால் தாக்கப்படவில்லை என்று இல்லச் சிறுவர்கள் மன்றுக்கு சத்தியக் கடதாசி சமர்ப்பித்திருந்தனர்.

சக்திகிரீவனின் சார்பில் சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆஜராகியிருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி நள்ளிரவுவேளை மேற்படி சிறுவர் இல்லத்தை முற்றுகையிட்ட பொலீஸார், இல்லத்தின் விடுதிப் பொறுப்பாளர் உட்பட மூவரைக் கைதுசெய்திருந்தனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் மறுநாள் சாவகச்சேரி நீதிமன் றில் ஆஜர்செய்யப்பட்டதை அடுத்து இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பாளரான இந்துசமயப் பேரவையின் செயலாளர் சக்திகிரீவனைக் கைதுசெய்யுமாறும் மன்று உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து, கடந்த ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இவர், அதேமாதம் 17ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். (எ-10-31-117)

# விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க படையினருக்கு புதிய நடைமுறைகள்

## இராணுவ ஆலோசகர் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

படையினரின் வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- இப்படி நீதிமன்றத்தில் கூறியுள்ளார் இராணுவ சட்ட ஆலோசகர் கப்டன் குறுப்பு

யாழ்.மடத்தடியில் இடம்பெற்ற இராணுவ ட்ரக் - மோட்டார் சைக்கிள் விபத்துத் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் அவர் இதைத் தெரிவித்தார்.

விபத்துக்களைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அவர் தெரிவித்த விவரங்கள் வருமாறு:-

★ இராணுவத் தேவைக்காக யாழ். நகருக்கு படையினர் எடுத்து வரும் வாகனங்களை வீதிகளில் நிறுத்தக்கூடாது. நகரில் உள்ள 512ஆவது படையணி அலுவலகத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டுச் சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர் அவற்றை எடுத்துச்செல்லவேண்டும்.

★ வீதி விபத்துக்களைத் தடுக்க இராணுவச் சாரதிகளுக்கு வீதிப் போக்குவரத்து தொடர்பாக வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

★ இராணுவ வாகனச் சாரதிகள் எந்தவகையான வாகனங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளனரோ அந்த ரக வாகனத்தையே செலுத்தவேண்டும்.

படை முகாம்களில் இருந்து வெளியே செல்லமுன்னர் பொது வீதிப் போக்குவரத்துக்கு படை வாகனம் தகுதியானது என்று முகாமின் போக்குவரத்துப் பிரிவினர் பரிசோதித்து அனுமதி வழங்கவேண்டும்.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றுமாறு முகாம்களின் பொறுப்பதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ சட்ட ஆலோசகர் மேலும் தெரிவித்தார். (ஒ-3-5)

## ரஷ்ய தீவிபத்தில் இலங்கை மாணவி உயிரிழப்பு!

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றின் மாணவர் விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் இலங்கை மாணவி ஒருவரும் உயிரிழந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தீ விபத்து ஏற்பட்ட கட்டடத்தின் 3ஆவது மாடியிலிருந்து உயிர் தப்புவதற்காக இந்த மாணவி ஜன்னல் வழியாகக் கீழே குதித்ததாகவும் -

அப்போது தரையில் மோதி உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

*(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)* (ஒ-9)

## நிவாரண வழங்கல் கட்டளை விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.25

ஒக்ரோபர் மாத இலவச நிவாரணத்துக்கான உணவுப் பொருள்களுக்குரிய வழங்கல் கட்டளைகள் நாளை புதன்கிழமை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.நல்லையா அறிவித்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்கள் ஓகஸ்ட் மாதத்திற்கான நிவாரண விநியோகத்துக்குரிய முன்னேற்ற அறிக்கைகளை அல்லது பிரதேச செயலருக்கு ஒப்படைத்த முன்னேற்ற அறிக்கையின் பிரதியை செயலக புனர்வாழ்வுப் பகுதியில் ஒப்படைத்து தமக்குரிய ஒதுக்கீட்டினை நாளை பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ-10)

## இந்திரா டி சில்வா பெயர் மீண்டும் சிபார்சு

கொழும்பு,நவ.25

வெற்றிடமாகவுள்ள பொலீஸ்மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பொலீஸ்மா அதிபரான இந்திரா டி சில்வாவின் பெயர் அரசமைப்பு சபைக்கு மீண்டும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

பதில் பொலீஸ்மா அதிபராகக் கடமையாற்றும் அவரது பெயரை சிபார்சு செய்ய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்.

பொலீஸ்மா அதிபர் பதவிக்கு ஒருவரின் பெயரை சிபார்சு செய்யுமாறு அரசமைப்புச் சபை ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கையின் பேரிலேயே இந்திரா டி சில்வாவின் பெயர் இரண்டாவது தடவையாகவும் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

### மாவீரர் நினைவுநாளை முன்னிட்டு

# வாதரவத்தையில் 2 ஆயிரம் சவுக்கு வியாழனுக்குள் நடுகைசெய்யப்படும்

வலி.வடக்கு, நவ.25

மாவீரர் நினைவுநாளை முன்னிட்டு புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் 2 ஆயிரம் சவுக்குக் கன்றுகள் நடும் திட்டம் ஒன்றை தமிழீழ வனவளப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

கடற்காற்று உட்புகுவதனால் இப்பகுதியில் உள்ள மரங்கள், தரைகள் பாதிப்படையும் அபாயத்தை எதிர்நோக்கிவந்தன. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நேற்றுமுன்தினம் வாதரவத்தைப் பகுதி மக்களின் அனுசரணையுடன் சவுக்குக் கன்றுகள் நடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மாவீரர் வார இறுதி நாளான எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் இச்சவுக்கு மரக் கன்றுகள் நடுகைசெய்யப்பட்டுவிடும் என்றும் -

தொடர்ந்து இந்தக் கன்றுகளைப் பராமரிக்கும் பொறுப்பையும் அப்பகுதி மக்கள் ஏற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-86)

# 10ஆயிரம் பனம் விதைகளை இன்று நடுவதற்கு ஏற்பாடு

மட்டக்களப்பு,நவ.25

புலிகளின் மாவீரர் வாரத்தை முன்னிட்டு பனை அபிவிருத்திச் சபையும் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவும் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் 25ஆயிரம் பனம் விதைகளை நடவுள்ளனர். பனம் விதை நடும் நிகழ்வு இன்று காலை தரவை மாவீரர் துயிலும் இ[illegible]றில் ஆரம்பித்து வைக்கப்படும். வி[illegible]ப் புலிகளின் தளபதிகள் பல[illegible] நிகழ்வில் கலந்துகொள்ளவு[illegible]னர்.

தரவையிலிருந்து புலிபாய்ந்தகல் வரை இன்று 10 ஆயிரம் பனம் விதைகள் நடப்படவுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபையின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் கே.எஸ்.நாகேஸ்வரன் தெரிவித்தார்.

# அமைச்சரின் காவலரிடமிருந்து பறித்த துப்பாக்கி கண்டுபிடிப்பு

கொழும்பு,நவ.25

அமைச்சர் காமினி ஜயவிகிரம பெரேராவின் பாதுகாப்புப் பிரிவினர் வசமிருந்து பறித்துச்செல்லப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி ஒன்று இராணுவ வீரர் ஒருவரின் வீட்டின் பின்புறத்தில் புதைத்து வைக்கப்பட்டிருப்பது குளியாப்பிட்டி பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டது.

கிரியுள்ளையிலுள்ள அமைச்சரின் வீட்டில் காவலுக்கிருந்த பொலீஸ் காரரிடமிருந்து ஒரு மாதத்துக்கு முன்னர் அந்தத் துப்பாக்கி யாரோ ஒருவரால் பறித்துச்செல்லப்பட்டது. பறித்துச் சென்றவர் அந்தத் துப்பாக்கியை இராணுவ வீரரிடம் கொடுத்திருக்கிறார் என்பது விசாரணைகளில் தெரியவந்திருக்கிறது.

துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து குறிப்பிட்ட இராணுவ வீரரும், அவருக்கு துப்பாக்கியைக் கொடுத்த நபரும் கைது செய்யப்பட்டனர். இராணுவவீரர் திருகோணமலைப் பகுதியில் கடமையாற்றுபவராவார்.

# ஐ.தே.மு.-பொ.ஐ.மு. கூட்டுக்கு அநுரா பண்டாரநாயக்க எதிர்ப்பு

## இரு ஆண்களுக்கிடையிலான திருமணம் என வர்ணிப்பு

கொழும்பு,நவ.25

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குமிடையே ஏற்படும் எந்தவொரு கூட்டு முன்னணியையும் தான் முற்றாக எதிர்ப்பதாக ஜனாதிபதியின் ஆலோசகர்களின் ஒருவரான அநுரா பண்டாரநாயக்க எம்.பி.கூறியிருக்கிறார்.

இந்தக் கூட்டு இரு ஆண்கள் திருமணம் செய்துகொள்வதைப் போன்றதாகும் என்று கூறமுடியும் எனவும் கூறியிருக்கும் அவர், சுதந்திரக் கட்சியிலுள்ள எம்.பிக்கள் அதனை எதிர்க்கின்றனர் எனவும் கிராமப் புறங்களிலுள்ள 80 வீத கட்சித் தொண்டர்கள் அதனை ஆதரிக்கவில்லை எனவும் தெரிவித்திருக்கிறார்.

சு.க. - ஜே.வி.பி. கட்சிகளுக்கிடையிலான முன்னணி இம்மாத இறுதிக்கிடையில் ஏற்படுத்தப்படுமெனவும அநுரா பண்டாரநாயக்க மேலும் கூறியிருக்கிறார். (ஒ)

# ஒரு லட்சத்து 10ஆயிரம் ஆசிரியருக்கு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை

கொழும்பு,நவ.25

இலங்கை ஆசிரிய சேவையிலுள்ள ஒரு லட்சத்து 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் 31ஆம் திகதியிலிருந்து பதவி உயர்வு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இது தொடர்பாக அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு சமர்ப்பித்த பத்திரத்தை அமைச்சரவை அங்கீகரித்திருக்கின்றது.

இலங்கை ஆசிரிய சேவையின் தராதரங்களை மட்டும் அடிப்படையாக வைத்து இந்தப் பதவி உயர்வுகளை வழங்குவது என்றும் அமைச்சரவை தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பாக சுற்றுநிருபம், சகல மாகாண கல்விச் செயலாளர்கள் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் விரைவில் அனுப்பிவைக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-9)

# ரஷ்ய பல்கலையில் திடீர் தீ! 32 பேர் கருகி மாண்டனர்!!

மொஸ்கோ,நவ.25

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் மாணவர்கள தங்கும் விடுதி திடீரெனத் தீப்பற்றியது. இதில், அங்கிருந்த 32 மாணவர்கள் கருகிப்பலியாகினர். 140 மாணவர்கள் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் விடுதிக்குள் சிக்குண்டுள்ளனர் அவர்களை மீட்கும் பணி தொடர்கிறது.

நேற்றுமுன்தினம் பற்றிக்லுமும்பா பீப்பிள்ஸ் பிரண்ட்ஷிப் பல்கலைக்கழக (Patrice Lumumba people's friendship University) விடுதியே திடீரெனத் தீப்பற்றியது. அதிகாலை 5.40 மணியளவில் தீ பற்றியதால் அங்கிருந்த மாணவர்களில் பலர் உறக்கத்திலேயே எரிந்து கருகினர்.

ஐந்து தளங்களைக் கொண்ட இந்த விடுதிக்கட்டடத்தின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தளங்களை தீ வேகமாகச் சூழ்ந்தது. இதனால், மாணவர்கள் வெளியேற முடியாத வகையில் விடுதிக்குள்ளேயே சிக்கினா.



தீப்பற்றி எரியும் பல்கலைக்கழக கட்டடம்

அங்கிருந்த மாணவர்கள் மேல் தளத்திற்கும் செல்லமுடியாதவாறும் கீழ்த்தளத்திற்கு இறங்க முடியாதவாறும் தீ பரவியிருந்தது.

இதனால் உயிர்தப்ப வேறு வழியின்றி ஜன்னல்கள் ஊடாக அவர்கள் கீழே குதித்தனர். இவ்வாறு தப்பியவர்களில் 78 மாணவர்களின் கழுத்து எலும்பு முறிந்துள்ளது. அத்துடன், உயரத்தில் இருந்து குதித்ததால் அவர்களில் பலர் படுகாயமடைந்தனர்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் வியட்நாம், பங்களாதேஷ், சீனா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் கல்விகற்று வந்தனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டு மாணவர்கள எனத் தெரிவிக்கப்படுகிறது. 18 வெளிநாட்டு மாணவர்கள் இந்த அனர்த்தத்தில் கொல்லப்பட்டுள்ளனர் என்று தனியார் தொலைக்காட்சி ஒன்று தெரிவித்துள்ளது.

விடுதிக்குள் மேலும் பல மாணவர்கள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்பதற்கு தீயணைப்புப் படையினர் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

பொலஸாரும் படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்து மீட்புப்படையினருக்கு உதவி வருகின்றனர்.

'32 சடலங்களை இதுவரை மீட்டுள்ளோம். 140 மாணவர்கள் எரிகாயங்களுடன் ஆபத்தானநிலையில் உள்ளனர். இன்னும் பலர் விடுதிக்குள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது' -என்றார் அங்குள்ள பொலீஸ் அதிகாரி ஒருவர்.

தீ விபத்திற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. எனினும், இது நாசவேலையல்ல என்றும் மின் கசிவு காரணமாகவே தீ பற்றியிருக்கலாம் என்று அந்த பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தீபற்றிய பல்கலைக்கழகத்தைச் சூழ்ந்து கரும் புகைமூட்டம் காணப்படுகிறது. நேற்று மாலைவரை தீ அணைக்கப்படவில்லை. இதனால், விடுதிக்குள் இருக்கும் ஏனைய மாணவர்கள் உயிர்தப்ப வாய்ப்பில்லை என்று அஞ்சப்படுகிறது.

(ஐ)

## ஆப்கானில் அமெரிக்க ஹெலி வீழ்ந்து நொறுங்கியது! ஐந்து படையினர் உயிரிழப்பு; ஏழு பேர் படுகாயம்!!

காபூல், நவ.25

ஆப்கானிஸ்தானில் நேற்றுமுன்தினம அமெரிக்க படையின் ஹெலி ஒன்று வீழ்ந்து நொறுங்கியது.இதில் பயணித்த ஐந்து அமெரிக்கப்படையினர் உயிரிழந்தனர். மேலும் ஏழு பேர் காயமடைந்தனர்.

தலைநகர் காபூலில் உள்ள அமெரிக்கப்படைத் தலைமையகத்துக்கு முன்பாக இந்த ஹெலி வீழ்ந்து நொறுங்கியது. இதனை அங்குள்ள அமெரிக்கப்படை உறுதி செய்தது.

நாட்டின் தென்பகுதியில் தலிபான்களின் மறைவிடங்களை குறிவைக்க புறப்பட்ட இந்தக் ஹெலி, தரையிலிருந்து கிளம்பிய சில நிமிடங்களில் வீழ்ந்து நொறுங்கியதாக அமெரிக்கபடைவீரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

"காலநிலை சீரின்மை அல்லது இயந்திரக் கோளாறு காரணமாகவே ஹெலி வீழ்ந்தது" - என்று அமெரிக்க மத்திய படைப்பிரிவு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

தலிபான்களின் தாக்குதல் காரணமாக ஹெலி வீழ்த்தப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

ஆனால், ஹெலி வீழ்ந்ததை நேரில் பார்த்த ஒருவர் தெரிவிக்கையில்," ஆகாயத்தில் முதலில் பாரிய சத்தம் கேட்டது. அதனையடுத்து ஹெலி கரும் புகைகக்கிய வாறு தரையில் வீழ்ந்தது" - என்றார்.

அமெரிக்கப்படை இதனை மறுத்துள்ள போதும், தலிபான்களின் தாக்குதலால் ஹெலி வீழ்ந்ததா என்பது குறித்தும் விசாரணைகள் நடைபெறுகின்றன.

வெட்ட வெளியில் வீழ்ந்த இந்தக் ஹெலியின் சிதறல்களை அமெரிக்கப் படையினர் தற்போது சேகரித்து வருகின்றனர். அப்பகுதியில் நூற்றுக் கணக்கான அமெரிக்கப படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச அமைதிப் படையினரை எதிர்த்து தலிபான்களின் தாக்குதல்கள அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன என்று ஐநா.கடந்த வாரம் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில்,இந்தக் ஹெலி வீழ்ந்து நொறுங்கியது.

அதற்கிடையே-

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் இரண்டு அமெரிக்கப் படையினர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



ஹெலி வீழ்ந்த இடத்தில் அதன் சிதைவுகளைத் தேடும் அமெரிக்கப் படையினர்.

## ஈராக்கியர்களின் தாக்குதல்களில் மேலும் மூன்று படையினர் பலி!

பக்தாத்,நவ.25

ஈராக்கிய கெரில்லாக்கள் நேற்று முன்தினம் நடத்திய இரண்டு வெவ்வேறான தாக்குதல்களில் மேலும் மூன்று அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

பக்தாத்திலிருந்து வடக்கேயுள்ள மொசூல் நகரத்திலேயே இந்த இரண்டு தாக்குதல் சம்பவங்களும் நடைபெற்றன.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது, 101 ஆவது விமானப் படையைச் சேர்ந்த வீரர்கள் இரண்டு பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று அங்குள்ள அமெரிக்கப்படையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது வீரர் அங்குள்ள வெளிநாட்டு உணவகம் ஒன்றிற்கு முன்பாக காவலில் ஈடுபட்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

தாக்குதல் நடத்தியோர் கார் ஒன்றில் ஏறி தப்பிச் சென்றனர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

இதற்கிடையே-

பக்குவா நகரில் கடந்த இரண்டு நாளகளாக மேற்கொண்ட தேடுதலில 307 வெளிநாட்டு தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் 70 பேர் ஈரானையும் 140 பேர் சிரியாவையும் சேர்ந்தவர்கள். ஏனையோர் சவூதி அரேபியா, யேமன், பலஸ்தீனம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அப்பகுதியில் தொடர்ந்து தேடுதல் நடைபெறுவதாகவும் அமெரிக்கப் படையினர் அறிவித்துள்ளனர்.

## இத்தாலி அமைச்சருக்கு ஐந்தாண்டுகள் சிறை!

இத்தாலி பாதுகாப்பு அமைச்சருக்கு ஊழல் குற்றச்சாட்டில் ஐந்தாண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

அமைச்சராக இருந்து லஞ்சம் பெற முயன்றார் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதனால் இவர் கடந்த மாதம் பதவி விலகினார்.இவர் மீதான விசாரணை தீர்ப்பு தற்போது கூறப்பட்டுள்ளது. லஞ்ச குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால் இவருக்கு சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

## இந்தியாவுடன் போர் நிறுத்தம்: பாகிஸ்தான் அறிவிப்பு

இஸ்லாமாபாத்,நவ.25

காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன போர் நிறுத்தம் செய்வதாக பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி நேற்றுமுன்தினம் ஒரு தலைப்பட்சமாக அறிவித்துள்ளார். பாகிஸ்தானின் நல்லெண்ணத்தைக் கருத்திற்கொண்டு இந்தியாவும் போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையேயுள்ள எல்லைப்பகுதியிலும், காஷ்மீர் விவகாரத்திலும் இரு நாடுகளும் அடிக்கடி பீரங்கித்தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இதனால், இந்த இரு நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக முறுகல்நிலை தொடர்ந்து வருகின்றது. இந்த முறுகல் காரணமாக எதிர்வரும் ஜனவரி மாதம் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டுக்கு பிரதமர் வாஜ்பாய் செல்வாரா? என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

உலக அரங்கில்

## முரசொலி மாறனின் பூதவுடல் அரச மரியாதையுடன் தகனம்

சென்னை,நவ.25

இந்திய மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் பூதவுடல் நேற்று மாலை அரச மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

மாறனின் பூதவுடலுக்கு பிரதமர் வாஜ்பாய்,தி.மு.க.தலைவர் கருணாநிதி உட்பட பலர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுக்காலை மாறனின் வீட்டில வைக்கப்பட்டிருந்த அவரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தவென ஆயிரக்கணக்கானோர் குழுமினர். தி.மு.க. பிரமுகர்கள் அங்கு சோகத்துடன அமர்ந்திருந்தனர்.

தி.மு.க. கொடி போர்த்தப்பட்ட மாறனின் உடல் நேற்று மாலை 4 வரை பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பின்னர் பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

# டான்சி வழக்கில் ஜெயலலிதாவை டில்லி உச்சநீதிமன்றம் விடுவிப்பு!

## ஆயினும், பலத்த சந்தேகம் இருப்பதாக தீர்ப்பில் தெரிவிப்பு

டான்சி நிலபேர வழக்கில் இருந்து தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை டில்லி உச்சநீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது. இந்த நில பேரத்தில் ஜெயலலிதாவை நேரடியாகத் தொடர்புபடுத்த சட்ட ரீதியிலான சாட்சியம் இல்லை. இதனால், சென்னை உயர்நீதிமன்றம அவரை விடுவித்ததை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்திருக்கிறது.



ஆயினும், இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக சாட்சியங்கள் இல்லாவிட்டாலும் கூட, அவர் மீது பலத்த சந்தேகத்துக்கு இடமிருப்பதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

நீதிபதி ராஜேந்திரபாபு, நீதிபதி வெங்கட்ராமரெட்டி ஆகியோர் இந்தத தீர்ப்பை நேற்று வழங்கினா.

முதல்வர் பதவியில் நீடிக்க மிகுந்த நேர்மை வேண்டும். இதனால், இந்த வழக்கில் தனது மனச்சாட்சியை ஒருமுறை ஜெயலலிதா நினைத்துப் பார்க்க வேண்டுமென்றும் நீதிபதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தி.மு.க. வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி, ஜனதாக்கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி ஆகியோர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்களை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்.

### அ.தி.மு.கவினர் கொண்டாட்டம

டான்சி வழக்கில் இருந்து முதல்வர் ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா ஆகியோர் விடுவிக்கப்பட்டதையடுத்து மாநிலம் முழுவதும் அ.தி.மு.கவினர் பட்டாசு கொளுத்திக் கொண்டாடினர்.

தீர்ப்பு சாதகமாக வருமா, பாதகமாக வருமா என்ற அச்சம் நிலவியதால் அ.தி.மு.க எம். எல்.ஏக்கள் அனைவரும் சென்னையில் இருக்க வேண்டும் என ஜெயலலிதா உத்தரவிட்டிருந்தார். இதைத் தொடர்ந்து அனைத்து எம்.எல்.ஏக்களும் தங்கள ஊர்களில் இருந்து கிளம்பி சென்னை வந்து சேர்ந்திருந்தனர். போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதாவின் இல்லத்தின் முன் ஆயிரக்கணக்கான அ.தி.மு.கவினர் திரண்டிருந்தனர்.

ஜெயலலிதா விடுவிக்கப்பட்டார் என்று தகவல் வர, அ.தி.மு.கவினர் மத்தியில் உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. பட்டாசுகள் வெடித்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அ.தி.மு.கவினர் போவோர், வருவோர்க்கெல்லாம் இனிப்புக்களையும் அள்ளி வழங்கி மகிழ்ந்தனர்.

போயஸ் கார்டனில் காத்திருந்த அமைச்சர்கள், எம்பிக்கள், எம்.எல்.ஏக்கள் அனைவரும் ஜெயலலிதாவை வாழ்த்தி கோஷமிட்டனர். அவர்களைச சந்திக்க ஜெயலலிதா வெளியே வந்தவுடன் அனைவரும் அவருக்கு பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

தீர்ப்பு பாதகமாக இருந்தால் ஜெயலலிதா பதவி விலக வேண்டியிருக்கும் என்பதால், முன்னெச்சரிக்கையாக மாநிலம் முழுவதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

(ஐ)

# ஷெல் காஸ் வாங்குங்கள்... பரிசுகளை வெல்லுங்கள்...





ஒவ்வொரு 12.5 கி.கிராம் காஸ் சிலிண்டருடன் 'இலவசமாக' 2004ம் ஆண்டிற்கான பொக்கட் கலண்டரும் பரிசுகள் வெல்லும் வாய்ப்பும் உண்டு...
மாதமொரு தடவை ஆயிரம் ஆறுதல் பரிசுகள்

இறுதிப் பரிசிழுப்பின்போது 21" கலர் தொலைக்காட்சி (Flat Screen)

- 12.5 கி.கிராம் காஸ் சிலிண்டரை மீள நிரப்பும்போது காஸ் விநியோகஸ்தரிடம் கூப்பனைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.
- அக் கூப்பனில் உங்களது பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைத் தெளிவாக எழுதவும்.
- கேட்கப்பட்டுள்ள வினாவுக்கு சரியான விடையை எழுதவும். பொக்கட் கலண்டருடன் உள்ள கூப்பனைக் கிழித்து எடுக்கவும்.
- உங்களது விபரங்கள் எழுதிய கூப்பனை ஷெல் காஸ் விநியோகஸ்தரிடம் கையளிக்கவும்.
- இவ்வாறு கையளிக்கும் ஒவ்வொரு கூப்பனுக்கும் மாதாந்த இறுதிப் பரிசிழுப்பின் போது பரிசுகளை வெல்லும் வாய்ப்புண்டு.
- இவ்வரிய வாய்ப்பானது 2003 ஒக்டோபர் 6ம் திகதியிலிருந்து டிசெம்பர் 31ம் திகதிவரை மட்டுமே செல்லுபடியாகும்.


"எப்போதும் நம்பிக்கையானது ஷெல் காஸ்"




ரினாய்.... அதுவே சமைத்தலின் சந்தோஷம்

LICENCE NO: C/81/2003

Shell GAS




உங்களின் சகல தொலைபேசி அழைப்புக்களுக்கும் எந்நேரமும் டயலொக் உடன்

டயலொக்கின் புதிய சேவை நிலையங்கள் இல. 141 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். இல. 47, மத்திய வீதி, திருகோணமலை.

கட்டணங்களை செலுத்துதல், புதிய இணைப்புகளை ஏற்படுத்துதல் (முன்னர் செலுத்தப்பட்ட - கார்ட் மற்றும் பின்னர் செலுத்தும் (பற்றுச்சீட்டு), புதிய தொலைபேசி கருவிகளை வாங்குதல், சார்ஜ் அட்டைகளை (Charged Cards) வாங்குதல், CLI, SMS உட்பட ஏனைய கட்டணத்துக்கான சேவைகளை இங்கே பெற்றுக்கொள்ளமுடியும்.

டயலொக் GSM

எதிர்காலம் இன்றே.

உதயன்

## பயனற்ற குரல்

★ கிழக்கில் முஸ்லிம்கள் ஆயுதம் தூக்கியுள்ளனர்.

★ எரிமலையாகக் கொதிக்கும் பிரச்சினை தற்போது மலையகத்துக்கும் பரவிவிட்டது.

- இவ்வாறு அபாயச் சங்கு ஊதியிருப்பவர் வேறு யாருமல்லர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கதான். கடந்த சில தினங்களாகக் கொழும்பில் நடைபெற்ற சில பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு எச்சரிக்கைக் குரல் எழுப்பியிருக்கின்றார் அவர்.

நாட்டில் தீர்க்கப்படாமல் உள்ள தற்போதைய பிரச்சினையால் வடக்கு முதல் தெற்கு வரை வியாபித்திருக்கும் குழப்பநிலை, இப்போது மலையகம் உட்பட நாடு முழுவதும் பரவிவருகின்றது என்றும் அபாய அறிவிப்பு விடுத்திருக்கின்றார் அவர்.

இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

ஆனால், தீர்வு காண்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் எவ்வாறு தடுக்கப்பட்டன, யாரால் தடைப்பட்டு நிற்கின்றன என்பதை அவர் சிந்தித்துப் பார்தததாகத் தெரியவில்லை.

அப்படி சிந்தித்தாலும் 2000 ஆம் ஆண்டில் தாம் கொண்டு வந்த அரசமைப்பு நகல் திருத்தத்தைக் குறிப்பிட்டு, அது ஒன்றுதான் தீர்வுக்கான முயற்சி என்பது போலவும், அதை அப்போதைய பிரதான எதிர்க் கட்சியாக விளங்கிய ஐ.தே.கட்சி எதிர்த்துக் குழப்பிவிட்டது என்றும் கீறல்விழுந்த 'றெக்கோர்ட்' மாதிரி அதையே திருப்பித் திருப்பிக் கூறவும் அவர் தவறுவதில்லை.

இலங்கை இனப்பிரச்சினை வெறும் சிங்கள சமூகத்துக்கு உரியதொன்றல்ல. ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களின் சிக்கல்கள் ஒன்றாகக் கலந்து உருவான பிணக்கு - பூசல் - அது.

இனப்பூசலுக்கு இணக்கத் தீர்வு காண்பதானால் அதில பிரதான பங்காளிகளாகத் திகழவேண்டிய தமிழர் தரப்பைப் புறக்கணித்துவிட்டு அத்தகைய தீர்வை எட்ட முடியாது. இந்த அடிப்படையை ஏற்க மறுத்து, நிராகரித்து, தமிழர் தரப்பை ஒதுக்கிவிட்டு, ஒரு தலைப்பட்சமாகவே 2000 ஆம் ஆண்டின் அரசமைப்புத் திருத்த நகலை தாம் கொண்டு வந்தார் என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறந்துவிடக்கூடாது.

1970 இல் அவரது தாயாரின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசினாலும், 1978 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசினாலும் இரண்டு அரசமைப்புக்கள் கொண்டுவரப்பட்டன. தமிழர்களின் உரிய பங்களிப்பின்றி - தமிழர்களின் அபிலாஷைகளையும் கவனத்தில் கொள்ளாமல் - பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் விதத்தில் பேரினவாதிகளாலேயே தயாரிக்கப்பட்ட இந்த அரசமைப்புகள் பெரும்பான்மை இனத்தவர்களால் தமிழர்கள் போன்ற சிறுபான்மையினர் மீது திணிக்கப்பட்டன. பெரும்பான்மைச் சமூகத்தின் அந்தப் போக்கே தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தை இவ்வளவு தூரம் விஸ்வரூபமெடுக்க வைத்து, இனப்பூசலைத் தீர்க்க முடியாத அளவுக்கு மோசமாக்கியது என்பது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட அனைத்து அரசியல்வாதிகளுக்கும் தெரிந்ததுதான்.

அப்படியிருக்க, மீண்டும் ஒரு தடவை தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய பிரதிநிதிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தம்பாட்டில் - ஒரு தலைப்பட்சமாக - இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசமைப்பு நகல் என்று தாம் 'தமுக்கு' அடித்துப் பிரகடனப்படுத்திய ஒன்றை நாடாளுமன்றுக்குக் கொண்டு வந்துவிட்டு, அதுவே தீர்வுக்கான பெருமுயற்சி, அடிப்படை என்றெல்லாம் ஜனாதிபதி முழங்கியது - முழங்குவது - நகைப்புக்குரியது.

சரியோ, பிழையோ - முறையானதோ, முறையற்றதோ. - கடந்த இரண்டு வருட காலமாக பிரதமர் ரணிலின் அரசு எடுத்த சமாதான முயற்சிகளில் பிரச்சினையில் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரும் நேரடியாக ஈடுபட்டிருந்தனர்; முன்னெப்போதுமில்லாதவாறு யுத்தநிறுத்தம் சுமார் இரண்டு வருடங்களாக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தது; தீர்வுக்கான அடிப்படையாக சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வை அடையாளம் காணுமளவுக்கு பேச்சுக்களில் முன்னேற்றம ஏற்பட்டது; இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசுக்கு மேலதிகமாக புலிகள் தரப்பும் வரைவு ஒன்றை முன்வைக்கும் அளவுக்கு பேச்சுக்கள் விரிந்தன.

இவ்வளவு நல்ல காரியங்களும் நடக்கும் சமயத்தில் - மீண்டும் தனது ஒருதலைப்பட்சமான நடவடிக்கை மூலம் - சகலவற்றையும் குழப்பி, போட்டுடைத்தார் ஜனாதிபதி.

இவ்வளவு குழப்பத்தையும் ஏற்படுத்திய பின்னர் - நிலைமையை சீர்திருத்துவதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு ஒத்துழைக்க மறுத்துக்கொண்டு, 'பிரச்சினை மலையகம் வரைப் போய்விட்டது. முஸ்லிம்கள் ஆயுதம் தூக்குகின்றார்கள்!' - என்றெல்லாம் கத்தி என்ன பயன் கிடைக்கப்போகின்றது?

## காலத்தின் பதிவு



தத்தளிக்கும் வாழ்க்கை...

படம்: தீபன்

# யாழ். மாவட்ட கலாசாரவிழா வீரசிங்கம் மண்டபத்தில்

## எதிர்வரும் 29,30ஆம் திகதிகளில் நடக்கும்

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களின் கலையகம நடத்தும் வருடாந்த கலாசார விழா - 2003 எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மேலதிக அரச அதிபா திருமதி ப. திலகநாயகம்போல் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் முதலாம் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன் கலந்துகொள்வார். இரண்டாம் நாள் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.

எதிர்வரும் 29ஆம் திகதி கலாசார ஊர்வலம் ஒன்றும் வண்ணை சிவன்கோயில் முன்றிலில் இருந்து ஆரம்பமாகும். ஊர்வலம் கே.கே.எஸ். வீதி, ஆஸ்பத்திரி வீதி, வேம்படி வீதி வழியாகப் பிரதான வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடையும். அங்கு பிற்பகல் ஒரு மணிக்கு கலாசார விழா ஆரம்பமாகும்.

நாட்டுக்கூத்து, கவியரங்கம், பட்டிமன்றம், கர்நாடக இசை நிகழ்வு, நாட்டார் பாடல், ஒயிலாட்டம் உட்பட பலகலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன என மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலநாயகம் போல் தெரிவித்தார். (எ-8)

# காணாமற்போனவர்கள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றில் வழக்கு தாக்கல்

## மன்னிப்புச் சபையின் உதவியை நாடுகிறது பாதுகாவலர் சங்கம்

யாழ்ப்பாணம்,நவ.25

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பாக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு சர்வதேச மன்னிப்புச்சபையின் உதவியை காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் நாடியுள்ளது.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதத்தினை வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணி ஆகியன இணைந்து சர்வதேச மன்னிப்புச்சபைக்கு அனுப்பிவைத்துள்ளன.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சங்கம் கடந்த ஜூலை மாதம் தங்களுக்கு அனுப்பிய கடிதத்திற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை கிடைத்ததும் காணாமற்போனோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாகத் தெரிவித்திருந்தீர்கள்.

விசாரணைகளை மேற்கொண்ட விசாரணைக் குழுவினர் தமது அறிக்கையில் கைதடிச் சுற்றிவளைப்பில் சம்பந்தப்பட்ட டுமிந்தா எனும் படை அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் தமக்கு இல்லை எனத் தெரிவித்துள்ளமை எமக்கு மிகுந்த கவலையை அளிக்கிறது.

எமது சங்கத்தில் காணாமற் போனவர்கள் என்று குறிப்பிடப்படும் 234 பேரும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு, வீதி சோதனை என்பவற்றின் மூலம் கைது செய்யப்பட்டவர்கள. இதனை உறுதி செய்யும் வகையில் கிராம அலுவலர்கள், அரச அதிபர் மற்றும் பொலீஸாரால் வழங்கப்பட்ட கடிதங்கள் ஒவ்வொரு பெற்றோரிடமும் உள்ளன.

படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர்களின் குடும்பங்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதற்காகவே இந்த இரு அமைப்புக்களையும் உருவாக்கிச் செயற்பட்டு வருகிறோம்.

எந்த ஓர் அரசியல் கட்சியுடனோ அன்றி எந்தக் குழுக்களுடனோ எமக்கு எத்தகைய தொடர்பும் இல்லை என்பதனை தங்களுக்கு உறுதியாகத் தெரிவிக்கின்றோம்.

இந்த உண்மை நிலைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசின் நடவடிக்கைகளை சர்வதேச நாடுகளுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

- என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ப-5)

### நாளை

கார்த்திகை 10
புதன்கிழமை
(26.11.2003)
திதி : திருதியை
முன்னிரவு 10.40 வரை
நட்சத்திரம்: மூலம்
மாலை 6.13 வரை
சுபநேரம்: 04.43-06.12
ராகுகாலம்: 12.12 - 1.43
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பொன்னைக் காட்டிலும் பொழுது மிகவும் பெரியது.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு திருமலையில் ஓட்டோ பேரணி

திருகோணமலை,நவ.25

மாவீரர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் நேற்று முன்தினம் ஓட்டோப் பேரணி இடம்பெற்றது.

காலை 8 மணிக்கு திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள இந்து கலாசார மண்டப வளாக முன்றிலில் இருந்து ஓட்டோப்பேரணி ஆரம்பமானது.


மாவீரர் நாளையும் மாவீரர்களையும் நினைவுபடுத்தும் பதாகைகள் சகிதம் அலங்கரிக்கப்பட்ட சுமார் 500 ஓட்டோக்கள் பேரணியில் கலந்துகொண்டன.

திருகோணமலை நகரின் பிரதான வீதியால் வந்த ஓட்டோப் பேரணி இரண்டாகப் பிரிந்து ஒரு அணி நிலாவெளி நோக்கிச் சென்றது. மற்றைய அணி தம்பலகாமம் நோக்கிச் சென்றது. எழுச்சிப் பேரணிகளில் மாணவர்கள் உட்பட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

பேரணியின் முடிவில் தம்பலகாமம் பாடசாலையில் நினைவுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. தம்பலகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் திருமலை உட்பட அங்கு பலர் உரையாற்றினர்.

# "நாடு முழுவதும் வலம் வந்தாலும் நாடும் பயணத்தில் மிக நம்பிக்கையானது"

# இவர் உண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையாளர்.




**சுதேஷ் பிரியங்க**
அறவிடும் நிறைவேற்றதிகாரி
நிதி மற்றும் காணி விற்பனை நிறுவனம்

"என்னுடைய தொழில் நிமித்தமாக நான் நாடு முழுவதும் போக வேண்டியுள்ளது. அப்பொழுது எனக்கு தினமும் ஒரு நம்பிக்கையான வாகனம் அதி முக்கியம் என்பதை நன்குணர்ந்து கொண்டேன்.

அதற்கெனவே *pulsar* மோட்டார் சைக்கிளை வாங்கினேன். வாங்கிய நாள் முதல் அன்றாட அலுவல்களுக்கு மிக இலகுவாகவுள்ளது. இப்போது எனக்கு எச்சமயத்திலும் குறித்த நேரத்திற்கு நம்பிக்கையுடன் போகவும் முடியும். வீட்டு வேலைகளை மட்டுமல்ல, நண்பர்களுடன் பொழுதைக் கழித்திடவும் உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளவும் முடிகிறது.

*pulsar* மோட்டார் சைக்கிளின் கவர்ச்சிகரமான தோற்றம், என்ஜின், டிஸ்க் பிறேக் ஆகியன எனக்கெனவே தயாரிக்கப்பட்டதைப் போலுணர்கின்றேன். அதில் செல்.்ப் ஸ்டார்ட் உள்ளதால் என்ஜினை இலகுவாக இயக்க முடியும். அத்துடன் அதன் முன்புற விளக்கின் ்.ப்ளாஷர், இரவு நேரப் பயணத்துக்கும் மிகப் பாதுகாப்பானது. பஜாஜ் மோட்டார் சைக்கிளின் விஷேட அம்சங்கள் வேறெந்த மோட்டார் சைக்கிள்களிலும் இல்லை.

மோட்டார் சைக்கிளை வாங்கிய நாள் முதலாக டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவையாளர்கள் மட்டுமன்றி, மேலதிக உதிரிப்பாக விற்பனை விநியோக வலையமைப்பினரும் நிழலாக என்னருகாமையிலேயே உள்ளார்கள். எனது பள்ஸர் மோட்டார் சைக்கிளின் அருமையைப் புரிந்து கொண்ட எனது நண்பர்கள் பலரும் பஜாஜ் மோட்டார் சைக்கிளை வாங்கியுள்ளார்கள்."

"ஏனையோரைவிட மோட்டார் சைக்கிளின்
பெருமையையும், பெறுமதியையும் நன்குணர்ந்தவர்கள்,
அதைப் பாவித்துப் பயனடையும் நாம் மட்டுமே."

**பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

## DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 4700600. தொலைநகல் : 4700677, 2687175.
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 4715050.
இணைய தளம் : http://www.dpmco.com
பிராந்திய அலுவலகங்கள் : கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹிபத்தக்கண்டிய, அனுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, யக்கலை, பதுளை, திருகோணமலை, மத்துகமை.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

# ஏனைய துறைகளுடன் ஒப்பிடும்போது கல்வியில் ஒன்றுமே நடக்கவில்லை

**அரசு - புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் தமிழர் பகுதியில் போர் நின்றதைத் தவிர வேறு ஏதாவது முன்னேற்றங்கள் இருக்கின்றனவா என்பது பற்றிய அலசல் இந்தப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.**

**இதுவரை செவ்வி வழங்கியவர்களின் கருத்துக்களின்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டதன் படியான மக்களின் இயல்பு வாழ்க்கை தமிழர் தாயகப் பகுதியில் ஏற்படவில்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட பல விடயங்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது செவ்விகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.**

**அந்தவகையில், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரனின் செவ்வி இன்று வெளிவருகின்றது.**



## ஆதங்கப்படுகிறார் தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் வே.இளங்குமரன்

*கேள்வி:* புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின் கல்வித்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?

*பதில்:* புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும் கல்விக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும் வன்னியைப் பொறுத்த வரையில் கல்வியில் பின்னடைவு தான் ஏற்பட்டுள்ளது. ஏனைய துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துடன் ஒப்பிடும்போது கல்வியில் எதுவும் நடக்கவில்லை.

வடக்கு - கிழக்கைப் பொறுத்த வரையில் பெரும்பாலான பாடசாலைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளும், பாதுகாப்பு வலங்களுக்குள்ளும் இருக்கின்றன. இதனால், அவை இயங்க முடியாத நிலையில் உள்ளன. பெரிய பாடசாலைகள் சில பெயருக்கு இயங்குகின்றனவே தவிர, அவையும் இராணுவ கெடுபிடிகளுக்கு முகம் கொடுத்து, இயல்பு நிலையில் இயங்க முடியாமல் உள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி மற்றும் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆகியன 175 வருட பழைமைவாய்ந்த பெயர் பெற்ற கல்வி நிறுவனங்கள். ஆனால், இன்று அவை முழுமையாக இயங்க முடியாத நிலையே காணப்படுகின்றது. அவை பெயரளவில் தான் இயங்குகின்றன.

*கேள்வி:* கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்த வன்னிப்பிரதேச பாடசாலைகளைப் புனரமைக்க அரச உதவிகள் கிடைக்கின்றனவா?

*பதில்:* யுத்தத்தைக் காட்டி, பொருளாதாரத் தடைகளைக் காட்டி கடந்த 10, 15 வருடகாலமாக சீமெந்து போன்ற கட்டடப்பொருள்கள் வன்னிக்கு வர அரசு அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக கட்டடப்பணிகள் ஏதும் நடக்கவில்லை. இதனால் வன்னிக்கு ஒதுக்கப்பட்ட நிதி வேறு மாவட்டங்களுக்குச் செலவிடப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தபின்னர் வன்னி மீதான பொருளாதாரத்தடை நீக்கப்பட்டது; யுத்தம் நின்றுவிட்டது. இதனால் பொருள்களை எடுத்து வந்து கட்டடப்பணிகளை மேற்கொள்ளா வாய்ப்பு உள்ளது. ஆனால், பொருள்களை கொள்வனவு செய்து கட்டடங்களை மீளமைக்க நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. கட்டட புனரமைப்பு வேலைகள் எதனையும் செய்யமுடியாத நிலையே தொடர்கின்றது.

*கேள்வி:* யுத்தத்தால் இடிந்த பாடசாலைகளை மீள அமைப்பதில் அரசசார்பற்ற அமைப்புகளின் பங்களிப்பு எப்படியுள்ளது?

*பதில்:* அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பும் பெரும் வெற்றியைத் தரவில்லை. இதற்கு மூலகாரணம் கட்டடங்களை அமைக்க போதிய தொழிலாளர்கள் இல்லாமை.

கடந்த 10, 15 வருடங்களாக வன்னியில் கட்டடங்கள் ஏதும் அமைகக்கப்படாததால் அந்தத் தொழிலாளர்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியமர்ந்துவிட்டனர். அவர்கள மீளத் திரும்பாததால் கட்டட தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் கட்டடங்களை அமைக்க முன்வரும் போது மற்றொரு சிக்கல் ஏற்படுகின்றது.

தொழிலாளர் பிரச்சினை, பொருள்கள் எடுத்து வருதல் போன்ற காரணங்களால் ஒப்பந்தகாரர்கள் கூடுதல் மதிப்பீடுகளை வழங்கவேண்டியுள்ளது. இதன் காரணமாக அந்தத் திட்டங்கள் நிராகரிக்கப்படுகின்ற சூழலே இங்கு நிலவுகின்றது. பல திட்டமதிப்பீடுகள் மூன்று தடவைகள் கூட திரும்பத் திரும்ப தயாரிக்கப்பட்டுள்ளன. பெயரளவில் அரசசார்பற்ற நிறுவனங்கள் நிதியை ஒதுக்குகின்றனவே தவிர, அவற்றைச் செலவிடமுடியாத நிலையே காணப்படுகின்றது.

விரல் விட்டு எண்ணக்கூடிய அளவு பாடசாலைக் கட்டடங்களே புனரமைக்கப்பட்டுள்ளன. 'நிக்கொட்' நிறுவனம் ஊடாக எந்தவொரு பாடசாலைக் கட்டடமும் பூர்த்தி செய்யப்படவில்லை. சில பாடசாலைகளுக்கு கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவையும் முழுமையாக்கப்படவில்லை.

*கேள்வி:* ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் பாடசாலைக் கட்டடங்களைப் புனரமைக்க முன்வரவில்லையா?

*பதில்:* அந்த அமைப்பு வன்னியில் எதையும் செய்யவில்லை. யாழ்ப்பாணத்தில் பாடசாலைக் கட்டடங்களை அந்த அமைப்பு புனரமைப்புச் செய்துள்ளது. சேதமடைந்த கட்டடங்களை அந்த அமைப்பு புனரமைத்துள்ளது.

உலக வங்கி அதிகாரிகள் வன்னிக்கு வந்து சேதமடைந்த பாடசாலைகள் தொடர்பாக மதிப்பீடு செய்தனர். அப்போது சேதமடைந்த கட்டடங்களைத் திருத்தியமைப்பது குறித்து ஆராய்ந்தனரே தவிர, புதிய கட்டடங்களை அமைப்பது குறித்து ஆராயவும் இல்லை; திட்டமிடவும் இல்லை.

*கேள்வி:* தமிழ் மாணவர்களின் கல்வி வீழ்ச்சி அடைந்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அந்நிலையை சீராக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

*பதில்:* கல்வித் துறையில் எல்லாப் பக்கங்களிலும் சிக்கல் உள்ளது. 1970 ஆம் ஆண்டுகளில் தரப்படுத்தல் மூலம் உயர்கல்வியில் மட்டும் பாதிப்பு இருந்தது. அந்தப்பாதிப்பு வெளிப்படையாகத் தெரிந்தது; எதிர்ப்புக் கிளம்பியது. அதனால், அன்று வகுத்த திட்டத்தை மாற்றினார்கள். ஆனால், நோக்கத்தை மாற்றவில்லை. இன்று அந்த நோக்கத்தை எட்ட வேறு வழிகளைக கையாள்கிறார்கள்.

வளங்களைக் குறைப்பது, ஆசிரியர் நியமனங்களை மேற்கொள்ளாமல் விடுவது, கல்வி உபகரணங்கள் வருவதைத் தடுப்பது, பாடப் புத்தகங்களை தாமதமாக அனுப்புவது, சில பாடப்புத்தகங்களை அனுப்பாமல் விடுவது போன்ற செயல்கள் மூலம் அந்த நோக்கத்தை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

*கேள்வி:* தமிழர் வரலாற்றைத் திரிவுபடுத்தும் வகையில் புத்தகங்கள் மாணவர்களுக்கு அனுப்பப்படுவதாக எழும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ......?

*பதில்:* வரலாறு மட்டுமல்ல, சூழலுக்குத் தக்க கல்விடம் இங்கு வழங்கப்படவில்லை. நீர் வளங்கள், நில வளங்கள் தொடர்பான அறிவை வளர்க்கக்கூடிய கல்வி எமது மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. எமது பனை வளம், கடல் வளம் ஆகியவற்றை எமது மாணவர்கள் தெரிந்து அவற்றை மேம்படுத்தக்கூடிய அளவு அறிவை பெற கல்வித்திட்டத்தில் இடமில்லை.

கடற்றொழில் சம்பந்தமான பாடநூல்கள் அச்சிடப்படுகின்றன. அவை தனிச் சிங்கள மொழியில் தான் இருக்கின்றன. சிங்கள மாணவர்கள் அந்தப் பாடத்தை எடுத்தாலும் சரி எடுக்காவிட்டாலும் சரி அவை சிங்கள மொழியில் அச்சிட்டு விநியோகிக்கப்படுகின்றன. ஆனால், தமிழ்மொழியில் அந்தப் புத்தகங்கள் இல்லை. கொழும்பில் உள்ள தமிழ்மாணவர்களும் அந்தப்பாடத்தை படிக்கமுடியாது.

தொழில்நுட்ப பாடங்களை போதிக்கத் திட்டங்களும், பாடப் புத்தகங்களும் உள்ளன. அந்தப் பாடத்தைப் படிப்பிக்க ஆசிரியர்கள் இல்லை. இதனால் அவை படிப்பிக்கப்படாமலேயே உள்ளன.

தொழில்நுட்பப் பாடங்களில் ஒன்றாக வகுக்கப்பட்டுள்ள வர்த்தகப் பாடத்தைத்தான் ஆசிரியர்களும், மாணவர்களும் விரும்புகிறார்கள். வெளியில் சென்று பயிற்சிபெறத் தேவையில்லாமல் வகுப்பில் இருந்தே படிக்கக்கூடிய பாடமாக வர்த்தகம் இருப்பதுதான் அதற்குக் காரணம்.

*கேள்வி:* கல்வி அபிவிருத்திக்காக 3 ஆண்டு, 5 ஆண்டு திட்டங்கள் என பல திட்டங்கள் வகுக்கப்பட்டன. அவை நடைமுறைக்கு வந்தனவா?

*பதில்:* திட்டங்கள் வகுக்கப்பட்டமை உண்மைதான். எங்களுக்கு உரிய திட்டங்களை நாங்களே திட்ட வேண்டும். அவர்கள் தீட்டும் திட்டங்கள் காலந்தாழ்த்தியே எமக்குக் கிடைக்கின்றன. அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தமுன் அவற்றை நடைமுறைப்படுத்தவுள்ள பற்றாக்குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும். ஆனால், அது செய்யப்படுவதில்லை.

கல்விச் சீரமைப்பின் கீழ் வலயங்களை அமைக்கும் திட்டம் தெற்கில் நடைமுறைக்கு வந்து 2, 3 வருடங்களுக்குப் பின்தான் இங்கு நடைமுறைக்கு வந்தது. இது எமது கல்வி வரலாற்றில் இடம்பெறும் ஏழ்மையான ஒரு விடயம்தான்.

அரசு ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தி பின்னர் புதிதாக ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தும் போது தான் முன்னைய திட்டம் இங்கு வரும். ஜி.சீ.ஈ. (உயர்தர) பாடநூல்கள், கையேடுகள் ஆகியனவும் அப்படித்தான் இங்கு வருவது வழக்கமாகிவிட்டது. தமிழ்ப் பகுதிக்கும் அனுப்புகிறோம் என்ற பெயரளவுக்கு மட்டுமே அவை அனுப்பப்படுகின்றன. காலந்தாழ்த்தி வருவதால் எமது மாணவர் பயன் அடைவதில்லை.

*கேள்வி:-* கல்வி மேம்பாட்டுக்காக தமிழ்க் கல்விமான்கள் தயாரித்த திட்டம் நடைமுறைக்கு எப்போது வரும்?

*பதில்:-* திட்டங்கள் திட்டமிடப்பட்ட நிலையில் உள்ளன. அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவுவது யார்? என்பதுதான் தற்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

வெளி உதவிகளைப் பெறும் உரிமை எமக்குக் கிடைக்குமாயின், அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வாய்ப்புக் கிட்டும்.

*கேள்வி:-* இடைக்கால நிர்வாக சபை கிடைக்கும் பட்சத்தில் இத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வாய்ப்புக் கிடைக்குமா?

*பதில்:-* கல்வி தொடர்பான சரியான அதிகார உரிமை தரப்பட்டால் செய்யலாம். ஆசிரியர் நியமனம் செய்யும் உரிமை எமக்கு இல்லையெனில், அதில் பயன் ஏற்படாது. அடிப்படை அதுதான்.

**செவ்விகண்டவர்: குகா**

வன்னியில் 50சதவீத பற்றாக்குறை ஆசிரியர் சேவையில் உள்ளது. வடக்கு - கிழக்கில் 6ஆயிரம் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆயிரத்து 50 வெற்றிடங்கள் உள்ளன. ஆரம்பக் கல்வி ஆசிரியர் வெற்றிடமும் ஓரளவு உண்டு.

ஆசிரியர் பற்றாக்குறையுடன் தான் கல்விச் செயற்பாடுகள் இங்கு நடக்கின்றன. இது நேற்று இன்று ஏற்பட்ட பிரச்சினை அல்ல. கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடரும் கதை. இதே நேரம், 15ஆயிரம் மேலதிக ஆசிரியர்களை தெற்கில் சும்மா வைத்திருக்கிறார்கள்.

வன்னியில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுவதற்கு, ஆசிரியர்கள் வர மறுப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

அண்மையில் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமித்தார்கள். 1996, 1997ஆம் ஆண்டுகளில் பட்டதாரியாக வெளியேறிய ஒருவருக்கு இப்போது தான் நியமனம் வழங்கப்படுகின்றது. தற்சமயம் திருமணமாகி, குழந்தை

(10ஆம் பக்கம் பார்க்க)



தமிழ் மாணவர்களின் கல்வியை சீரழிக்க 1970களில் தரப்படுத்தல் என்ற திட்டத்தைக் கொண்டுவந்தனர். அத்திட்டத்தில் தமிழ் மாணவர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. அன்று வகுத்த திட்டத்தை மாற்றினர். ஆனால், அத்திட்டத்தின் நோக்கம் மாறவில்லை. அந்த நோக்கத்தை எட்ட வேறு வழிகளை இன்று கையாள்கிறார்கள்.

வளங்களைக் குறைத்து ஆசிரியர் நியமனத்தை மேற்கொள்ளாது கல்வி உபகரணம், பாடப்புத்தகங்கள் அனுப்புவதைத் தடுப்பது போன்ற செயல்கள் மூலம் அந்த நோக்கத்தை அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாகசபை மூலம் கல்வி தொடர்பாக சரியான அதிகார உரிமை தரப்பட்டால் எமது கல்வித் திட்டங்களைச் செயற்படுத்தலாம். ஆசிரியர் நியமனம் செய்யும் உரிமை எமக்கு இல்லை எனில், அந்தச் சபையால் பயன் ஏற்படாது.

தற்சமயம் புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்தபின் போர் நின்றுள்ளது. ஆனால், கல்வித்துறையில் உள்ள பற்றாக்குறைகள் தொடர்ந்தபடியே உள்ளன. மோசமடைந்த கல்வி நிலையை சீராக்க ஆசிரியர் நியமனம், பாடநூல் தயாரித்தல், கட்டடம் அமைத்தல் ஆகிய பணிகள் எம்மிடம் வரவேண்டும். 10 ஆண்டுகால பின்னடைவான கல்வியை எமது ஆசிரியர்களின் உணர்வு மற்றும் உழைப்பு மூலம் மட்டுமே சீராக்கலாம். அதுவும் உடனடியாகச் செய்யமுடியாது. முதலில் கல்வி அடைவு மட்டத்தை பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கே சில ஆண்டு காலம் எடுக்கும்.

## இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

## சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567

(சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-31108) (14)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

25–11–2003

HAPPY BIRTHDAY



## செல்வன் சி.அபிஷேக்

யாழ்.நாவாந்துறை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.திருமதி செல்வா - கயல்விழி தம்பதிகளின் செல்வப் புதல்வன் **செல்வன் அபிஷேக்** அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (25.11.2003) செவ்வாய்க்கிழமை சுவிற்ஸர்லாந்திலுள்ள தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றீர்.

இவரைக் குழந்தை யேசுவின் திருவருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், பூட்டம்மாமார், ஐயா, பெரியம்மாமார், பெரியப்பாமார், அண்ணாமார், அத்தான்மார், பேரன்மார், பேர்த்திமார், ஞானப்பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள்.

6/5, 3 ஆம் குறுக்கு,
நாவாந்துறை. (25001) (14)

தகவல்:
அம்மப்பா J.Y.சந்தியோ

## யாழ்.மாநகரசபை சுகாதாரப்பிரிவு டெங்கு ஒழிப்பில் தீவிரம்

நெடுந்தீவு, நவ.25

யாழ்மாநகரசபை சுகாதாரப் பிரிவு டெங்கு நோய் தடுப்பில் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

நகரில் நோய் இனங்காணப்பட்ட பகுதிகளுக்கு சுகாதார பரிசோதகர் பீ.ஆறுமுகம் தலைமையிலான நோய் தடுப்புக் குழு விரைந்து சென்று தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற கொள்வதுடன், டெங்கு நோய் காணப படும் இடங்களுக்கு அண்மையில் உள்ள பற்றைகளையும் வெட்டித் துப்புரவு செய்யும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. (எ-111)

## எழுச்சிப் பேரவைக்கு நடுவப் பணியகம்

கொழும்புத்துறை, நவ.25

யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைக்கான நடுவப்பணியகம் விரைவில் கோண்டாவில் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளில் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை ஈடுபட்டுவருவதாக அதன் செயலாளர் சொலமன் சூ. சிறில் தெரிவித்தா. (எ-30)

## மனைப்பொருளியல் கற்கைநெறி

தென்மராட்சி, நவ.25

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மகளிர் அபிவிருத்திப் பிரிவினர் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் மனைப்பொருளியல் அடிப்படை பயிற்சிநெறியினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சிநெறியில் கலந்து கொள்ளவிரும்பும் யுவதிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு சங்கப் பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் கேட்டுள்ளார். (எ-117)

## மின்விளக்குகள் பொருத்தப்பட்டன

தென்மராட்சி,நவ.25

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பகுதிகளில் வலுகூடிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பஸ் நிலையம், கொடிகாமம் பஸ் நிலையம், கைதடிச் சந்தி ஆகிய இடங்களில் இத்தகைய வலுக்கூடிய மின்விளக்குகள் இலங்கை மின்சாரசபையின் சாவகச்சேரிப் பிரிவினரால் பொருத்தப்பட்டுள்ளன. (எ-117)


## அழகுக் கலை பயிற்சி வகுப்புகள்

நீங்கள் ஓர் அழகுக் கலை நிபுணராக வர விரும்புகிறீர்களா?
இதோ! உங்களுக்காகவே யாழ்ப்பாணத்திலும்...!



- கோல்ட் Gold Facial
- சில்வர் Silver Facial
- பேள் பிளாட்டினம் Pearl platenam Facial
- கிளப்ரா Glabra Facial
- அன்டி ஏஜினிங் Anti Agening Facial
- பிக்மன்டேசன் Pickmantation Facial
- நோமல் Normal Facial
- வைற்னிங் Whitening Facial
- இத்துடன் 14 வகை பேசியல்களும் கற்பிக்கப்படும்.
  (மூன்றுநாள் பயிற்சி வகுப்பு) ரூபா 2,500/-
- சிகை வடிவமைப்பு Diploma in Hair Styling & Bridel Dressing மணப்பெண் அலங்காரம், முக ஒப்பனை
  (நான்கு மதத்தவர்களுக்கான - மூன்றுநாள் பயிற்சி வகுப்பு) ரூபா 2,500/-
- Diploma in Bridal Dressing & Beauty Culturel and Hair Styling ரூபா 10,000/-
  Purming, Straightling உட்பட இன்னும் பல விடயங்கள்
  (எட்டு நாள்கள் பயிற்சி வகுப்பு)

பயிற்சிநெறி எதிர்வரும் 09.12.2003 (செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
தொடர்ந்து 19.12.2003 வெள்ளிக்கிழமை வரை நடைபெறும்.

அமர்வின் முதல் நாளிலேயே கற்கை நெறிக்கான முழுக்கட்டணமும் செலுத்தப்படவேண்டும்.

விவரங்களுக்கு :அழகுக்கலை நிபுணர்
திருமதி மிதுனா ஆனந்தரமணன்
Dip.in Cosmetology Bridal Dressing, Hair Dressing, Cum Therapast (India & Sri Lanka)

★ தொடர்புகளுக்கு: 'உதயன்' பணிமனை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
★ பதிவுகள் யாவும் செல்வி ரோகினி மருதவாணர், இல.314, கோவில் வீதி, நல்லூர்.

7030, 3409
077 616 7729

என்பவரிடம் செய்துகொள்ளலாம்.

★ வகுப்பு நடைபெறும் இடம்: NIIT கீழ் தளம், (கஸ்தூரியார் வீதி, உதயன் பணிமனைக்கு அருகில்)
★ முக்கிய குறிப்பு: மேலதிக வகுப்புக்களின் விவரங்களுக்கு 06-11-2003 'உதயன' நாளிதழைப் பார்க்கவும்.

அழகுக்கலை பயிற்சி ஒருநாள் கருத்தரங்கில் பங்குபற்றியவர்களது வேண்டுகோளுக்கமைய மீண்டும் ஆரம்பமாகிறது. இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்.

(சி-31462) (14-) - நிறுவனத்தினர்.


உ
சிவமயம்

## திருமண அழைப்பு



எமது அன்பு மகன் திருவளர் செல்வன் **சாந்தகுமார்** அவர்களுக்கும்

எமது அன்பு மகள் திருவளர் செல்வி **குமுதினி** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணையுடன் நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் நடைபெறவுள்ளது.

காலம் : 28.11.2003 வெள்ளிக்கிழமை
சுபநேரம் : காலை 8.45 மணி முதல் 10.10 மணிவரை

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி வே.குலசிங்கம்
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி பொ.விசுவலிங்கம்
பனிக்கர் ஒழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 13 – 02 – 1927



மறைவு 25 – 10 – 2003

## அமரர் கந்தையா சுந்தரம்பிள்ளை

அன்புடனும் பாசத்துடனும் எம்மை எல்லாம்
வளர்த்து ஆளாக்கிய அன்புத் தந்தையே!
அன்பான ஐயாவே முட்டித்தொரு
நாள்களென்னமுந்நூறு ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுடனே இருப்போம்.

இன்று (25-11-2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும அந்தியேட்டிக் கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன அழைக்கின்றோம்.

திருப்பரம் குன்றம்,
மடத்தடி வீதி,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## வர்த்தக நிலையத்தில் திருடர்களின் கைவரிசை

தென்மராட்சி,நவ.25

சாவகச்சேரி தானையம்பதி வீதியில உள்ள வர்த்தக நிலையம் ஒன்று அண்மையில் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளது.

கூரைத் தகடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்து பால்மா வகைகள், சோப் வகைகள், பற்றரிகள், ஒரு மூடை செத்தல் மிளகாய், புதிய பெற்றோமக்ஸ் உட்பட பல பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## பச்சிலைப்பள்ளியில் காய்ச்சல் பரவுகிறது

தென்மராட்சி,நவ.25

அண்மையில் பெய்த மழையை அடுத்து தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோர் தொகை நாளாந்தம் அதிகரித்து வருவதாக இப்பகுதியில் உள்ள ஆஸ்பத்திரிகளின் புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தினமும் 400 இற்கு மேற்பட்டோர் இந்த ஆஸ்பத்திரிகளின் வெளி நோயாளர் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையில், இப்பிரதேசத்தில் வார்ட் வசதியுள்ள சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நோயாளர் தொகை அதிகரித்ததை அடுத்து இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. (எ-117)

## கூட்டுறவு சங்கங்களுக்கு நினைவுப் பரிசில்

அரியாலை,நவ.25

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அதிகளவு பொருள்களை கொள்வனவு செய்த குடாநாட்டில் உள்ள மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை சமாசத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் வைத்து இந்த நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன என சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

சுன்னாகம், நல்லூர், புலோலி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இந்த நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ-17)

# சரியானதை, உண்மையானதைக் கூற கிராம அலுவலர் தயங்கக் கூடாது!

## உதவிப் பிரதேச செயலர் அறிவுரை

வலி.வடக்கு,நவ.25

கிராம மட்டத்தில் உண்மையாகவும், நேர்மையாகவும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு என்றும் மரியாதை உண்டு. அந்த வகையில் கிராம மட்டத்தில் கிராம அலுவலர்கள் கூறுவது சரியானவையாகவும், உண்மையானவையாகவும் இருக்க வேண்டும். இவற்றில் தயக்கம் காட்டக் கூடாது. இதன்மூலம் மக்களால் மதிக்கப்படும் நிலைக்கு கிராம அலுவலர்கள் உள்ளாவர்.

மேற்கண்டவாறு கரவெட்டி உதவிப் பிரதேச செயலாளர் வே.வீரபத்திரபிள்ளை தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பயிற்சிநெறியின் முதலாம் நாள் அமர்வு செயலக திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இதில் 'கிராம அலுவலர்களின் கடமைகளும் அலுவலக முகாமைத்துவமும்' என்னும் விடயம் பற்றி உரையாற்றிய உதவிப் பிரதேச செயலாளர் வே.வீரபத்திரபிள்ளை,

கிராம அலுவலர்களுடைய கடமைகள் யாவும் சட்டத்திற்கு உட்பட்டவை. சம்பிரதாயபூர்வமான முறையில கடமைகளை ஆற்றமுடியாது. சட்டத்திற்குப் புறம்பாக செயற்பட்டால அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும்.

கிராம அலுவலர்கள் பலர் தினக்குறிப்பேட்டை சரியான முறையில் பேணுவதில்லை. கிராம அலுவலர்கள் தமது தினக்குறிப்பேட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். தினக்குறிப்பேட்டை பேணுவதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

தினக்குறிப்பு, நீதிமன்றங்களினால் கிராம அலுவலர்களிடம் இருந்து பெறப்படும் சாட்சியத்தின் முக்கிய ஆவணம் ஆகும். இதேபோன்று கிராம அலுவலர் பிரிவில் இடம்பெறும் சம்பவங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் முக்கிய ஆவணமும் கூட. இதனை எவரும் மறந்துவிடக்கூடாது.

கிராம அலுவலர்கள் தமது பதவியை மதிக்கக் கூடிய முறையில் நடக்கவேண்டும். எங்கு சென்றாலும் அவர்கள் தனித்துவமானவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளக்கூடியவாறு செயற்பட வேண்டும். சீருடை, இலட்சினை என்பவற்றை தவறாது அணிந்து கொள்ள வேண்டும் - என்றார்.

திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் உட்பட மற்றும் பலரும் கருத்துரை வழங்கினர். (எ-86-4)

# பிரிட்டிஷ் அரசின் நிதி உதவியில் வடக்கில் 13 பாலங்கள் திருத்தம்

யாழ்ப்பாணம்,நவ.25

வடபகுதியில் உள்ள 13 பிரதான பாலங்களைப் புனரமைப்பதற்கு புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

'ஏ' மற்றும் 'பி' தரத்திலான வீதிகளில் உள்ள 13 பாலங்களே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான நிதியினை பிரிட்டிஷ் அரசு வழங்கியுள்ளது. அடுத்தமாதம் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாவற்குழிப் பாலம், கைதடிப் பாலம், வண்ணாத்திப்பாலம், புலோலி- வரணிப் பாலம், வெள்ளாங்குளம் - தள்ளாடி வீதியில் உள்ள 4 பாலங்கள், பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உள்ள 5 பாலங்கள் என 13 பாலங்களே தற்பொழுது புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் இந்தப் 13 பாலங்கள் உட்பட வடக்கு - கிழக்கில் மொத்தம் 89 பாலங்கள் மூன்று ஆண்டுகளுக்குள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கென மொத்தமாக 30 கோடி ரூபாவினை பிரிட்டிஷ் அரசு வழங்கியுள்ளது. இதேபோன்று ஏ-9 வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

# திருட்டுக்கள் தொடர்பாக உடனடியாக பொலீஸ் நிலையங்களில் முறையிடுங்கள்

திருட்டுச் சம்பவங்கள் தொடர்பான தகவல்களை உடன் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்துமாறு பொலீஸ் நிலைய குற்றவியல் உதவிப் பொலீஸ் அதிகாரி கமகே கேட்டுள்ளார்.

யாழ். பொலீஸ் நிலையத்திற்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறுகின்ற களவுகள் தொடர்பாக உடனடியாக பொலீஸ நிலையத்திற்கு முறைப்பாடு செய்தால் - அது எந்த நேரமானாலும் சரி - திருட்டுச் சம்பவங்களை உடன் முறியடிக்கலாம் என்று தெரிவித்தார். தற்போது பொதுமக்கள் தமது வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றவுடன் பொலீஸ் நிலையங்களுக்கு தகவல்களை தருவதில்லை. ஓர் இரு தினங்கள் கழிந்த பின்பே கூடுதலான மக்கள் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து வருகின்றனர். இதனால் திருட்டுக்களைத் தடுக்க முடியவில்லை என்றார் அவர்.

## சாரதா அன்னையின் உருவப்படம் திறப்பு

சாவகச்சேரி,நவ.25

தூய அன்னை சாரதா அம்மையின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வரணி மகாவித்தியாலயத்தில் அன்னையின் உருவப் படம் கடந்த வாரம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. உருவப்படத்தினை பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா திறந்துவைத்தார். (எ-31)

## கூட்டுறவுச்சபை தலைவர் நியமனம்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவராக மீண்டும் நல்லூர் பல நோ.கூ. சங்கத்தின் தலைவர் பெகனகசபாபதி தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த வாரம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சபையின் பொதுக்கூட்டத்தில் புதிய தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டார்.

இத்தெரிவில் புதிய இயக்குநர் சபையும் தெரிவு செய்யப்பட்டது. (எ-17)

## சமுர்த்தி வங்கிக்கு அடிக்கல்

நெடுந்தீவு,நவ.25

நெடுந்தீவில் சமுர்த்தி வங்கிக்கான அடிக்கல் நடுகை செய்யப்பட்டுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் எஸ். பேரானந்தம் வங்கிக்கான அத்திவாரக் கல்லை நட்டு வைத்தார். (எ-111)

## மலசலகூடத்துக்கு கதவுகள் விநியோகம்

கொழும்புத்துறை,நவ.25

யாழ்நகர் கிழக்கு சமுர்த்தி அலுவலகத்தினால் அப்பகுதிகளில் வசிப்போரின் மலசலகூட புனரமைப்புக்கென இலவசமாக கதவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே, இந்த மலசலகூடங்களைப் புனரமைப்பதற்கென மேற்படி சமுர்த்தி அலுவலகம் சீமெந்து, மணல், கல் என்பனவற்றை வழங்கியதாக வலய சமுர்த்தி முகாமையாளர் கியூமன் தெரிவித்தார். (எ-30)

# மருத்துவச் சான்றிதழ்கள் ஏன் வாகன சாரதிகளுக்கு அவசியம்!

வீதி விபத்துக்கள் இன்று யாழ்ப்பாணத்தில் சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டன. இதனால் பெறுமதிவாய்ந்த உயிர்கள் பறிக்கப்படுகின்றன. மேலும் பலர் காயங்களுக்கு உட்பட்டு அங்கவீனர்கள் ஆகின்றனர். பெறுமதி வாய்ந்த உடைமைகள் சேதமாக்கப்படுகின்றன.

ஏன் இப்படி?

யாழ்ப்பாணத்தில் வாகன விபத்துக்களுக்கான காரணங்களை வகைப்படுத்துவோமாயின் அவற்றை சில வகைகளுக்குள் அடக்கி விடலாம்.

▲ வாகன சாரதிகளின் கவனக் குறைவும், மருத்துவ ரீதியிலான குறைபாடுகளும்

▲ வாகனங்களின் தரக்குறைவு (பிறேக், சிக்னல், கியர்....).

▲ வீதி சம்பந்தமானவை.

(1) வீதிகளின் ஒடுக்கம், மேடுபள்ளம், பல்வேறு வளைவு நெளிவுகள் (உதாரணம்:- பருத்தித்துறை வீதி)

(2) வீதிகளில் சமிக்ஞை விளக்குகள் இன்மை.

(3) அதிகரித்த வாகன நெரிசல்கள் (குறிப்பாக யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கர வண்டிகள்)

என்ற இந்தப் பட்டியல் இன்னும் கொஞ்சம் நீளலாம்.

இலங்கை போக்குவரத்துப் பிரிவின் மருத்துவ நிறுவனத்தின் யாழ். மாவட்டத்திற்கு பொறுப்பான வைத்தியர் என்ற வகையில் வாகன சாரதிகள் பற்றிய முதலாவது பகுதியை மட்டும் இங்கு விரிவாகப் பார்க்கலாம் என நினைக்கின்றேன். ஒரு சாரதிக்கு மருத்துவ ரீதியில் எவையெல்லாம் முக்கியம்?

### பார்வை (Vision)

வாகன சாரதிகளைப் பொறுத்தமட்டில் இது மிகமிக முக்கியமானது. முன்பக்கமாக, பின்பக்கமாகவரும் வாகனங்களின் பருமன், அவை வரும் வேகம், வாகனங்களுக்கு இடையேயான இடைவெளி, இடம் விட்டுக்கொடுக்க வீதியின் அகலம் என எத்தனையோ நுணுக்கமான கணத்தில் சிந்தித்து முடிவெடுக்கக் கூடிய திறனுக்கு பார்வைப்புலம் மிகமுக்கியமானது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் சில வாகன சாரதிகள் தங்களுடைய பார்வை குறைபாடுகளை அறியாத நிலையிலேயே வாகனங்களை ஓட்டுகின்றனர்.

உதாரணமாக எமது மருத்துவ நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆகக்குறைந்த பார்வை அளவு 6/6-6/12. என்னிடம் ஒக்ரோபர் மாதத்தில் மருத்துவ சான்றிதழுக்காக வந்த 60 பேரில், 5 பேர் மேற்படி அளவை வாசிக்கவில்லை. அவர்களை தகுந்த கண் மருத்துவரிடம் அனுப்பி குறைபாடுகளை நிவர்த்தி செய்து கண்ணாடி அணிந்தபின் அவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இன்னும் ஒருவர் கனரக வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருந்துவ சான்றிதழுக்காக வந்தார். அவருடைய கண்களில் ஒன்று சிறுவயதில் ஏற்பட்ட விபத்தொன்றினால் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. ஒரு கண் மட்டும் பார்வையுள்ளவர்களால் முன்பின் வரும் வாகனங்களுக்கு இடையிலான தூரங்கள், வீதியின் அகலம் என்பவற்றை சரியாகக் கணிக்கமுடியாது. அவருக்கு நிலைமையை விளக்கினேன். வாகனம் ஓட்டுவதால் தனக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படக்கூடிய தீங்கைப் பற்றி அவர் பின்னர் விளங்கிக் கொண்டார். எங்களுடைய மருத்துவ திணைக்கள அறிவுறுத்தல் படி ஒரு கண் தெரியாதவர்களுக்கு எந்த விதமான (மோட்டார் சைக்கிள் உட்பட) சாரதி அனுமதிப்பத்திரத்துக்குமான மருத்துவ சான்றிதழ் வழங்கமுடியாது.

என்னுடைய பிறிதொரு அனுபவத்தினையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கின்றேன்.

பெண் ஒருவர் மோட்டார் சைக்கிள் அனுமதி பத்திரத்திற்காக வந்தார். இவர் செய்முறை சோதனைக்காகச் சென்றபோது இவர் கண்ணாடி அணிந்திருந்ததை கண்ணுற்ற பரிசோதகர் இவருடைய மருத்துவ சான்றிதழை பரிசோதித்த போது அதில் கண்பார்வையில் பிரச்சினை எதுவும் இல்லை (6/6-6/6) என இருந்துள்ளது. இதன் காரணமாக என்னிடம் அந்தப் பெண்ணை அனுப்பியிருந்தார். நான் அவருடைய நீள்பார்வைத்திறனை கண்ணாடி இன்றி பரிசோதித்த போது கிட்டத்தட்ட மிகமோசமான பார்வைக் குறைபாடு காணப்பட்டது. (அதாவது 6/36 ஐயே அவரால் வாசிக்க முடியவில்லை). கண்ணாடி பாவித்தபோது பார்வைப்புலன் வழமைக்குத் திரும்பியது. (6/6இ 6/6). இதில் முக்கியமான விடயம் என்னவெனில், இவர் கண்ணாடி இன்றி வாகனம் செலுத்துவாரானால் விபத்து நிச்சயம்.

எவ்வாறு நீர் முதலில் மருத்துவ சான்றிதழ் பெற்றீர்? என அவரிடம் வினவியபோது அவர் கூறினார், தான் விண்ணப்பப் படிவத்தினையும் பணத்தையும் குறிப்பிட்ட ஒரு தனியார் மருத்துவ நிறுவனத்தில் காலையில் கட்டிவிட்டுப் போனதாகவும் மாலை சென்று பூர்த்தி செய்யப்பட்டு வைத்தியரினால் கையொப்பம் இடப்பட்ட படிவத்தினைப் பெற்றுக்கொண்டதாகவும் கூறினார்.

இலகு வாகன அனுமதிப்பத்திர மருத்துவ சான்றிதழ் வழங்கும் வைத்தியர்கள் தனிமனிதனதும் சமூகத்தினதும் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டும்.

### அங்க குறைபாடுகள் (கை, கால்)

இரண்டாவது முக்கியமான விடயம் இதுவாகும். கை அல்லது காலில் ஓரிரு விரல்கள் இல்லாதிருப்பின் அல்லது தொழிற்பாடு அற்றிருப்பின் அக்குறிப்பிட்ட அங்கத்தின் தொழிற்பாடு நுணுக்கமாக ஆராயப்படும். (இறுக்கி பிடித்தல், சடுதியாகப் பயன்படுத்தல் போன்றன) அவ்வங்கத்தின் வலு Stearing, Breaking போன்றவற்றிற்கு போதுமானதாக இருப்பின் சான்றிதழ் வழங்கலாம். ஆனால், கை இல்லாத அல்லது கால் இல்லாத ஒருவர் அல்லது அவை இருந்தும் செயலற்றிருப்பின் குறிப்பிட்ட நபர் எந்தவிதமான வாகனங்களுக்குமான மருத்துவ சான்றிதழுக்கும் தகுதியற்றவராவார். எனினும் வாகனமானது அவருக்காக பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டிருப்பின், அவரை அவ்வாகனத்தை ஓடவிட்டு அவதானித்து அனுமதி வழங்கலாம். மேலும் விண்ணப்பிக்கும் ஒருவர் ஏற்கனவே விபத்தில் சிக்கி கை அல்லது கால் எலும்புகளில் முறிவுகளுக்கு சிகிச்சை பெற்றிருப்பின் சிகிச்சை பெற்றபோது வைத்தியசாலையில் வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையை (Diagnosies Cord) கொண்டுவருதல் வேண்டும்.

### இதயம், நுரையீரல், ஈரல் போன்றவற்றின் செயற்திறன்

புதிதாக விண்ணப்பிப்பவர்கள் பொதுவாக இளைஞர்கள் என்பதனால் மேற்படி தொகுதிகளில் பிரச்சினைகள் இருப்பதில்லை. எனினும், என்னிடம் விண்ணப்பித்த ஒருவரின் மார்பை பரிசோதித்தபோது நுரையீரல் தொற்று இருப்பதனை உணர்ந்தேன். மேலதிக பரிசோதனைகளுககு (X கதிர், சளிசோதனை) உட்படுத்தியபோது அவருக்கு காசநோய் தொற்றியிருப்பது தெரியவந்தது. மேலும் ஒருவருக்கு இதய வால்வில் பிரச்சினை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்க வந்தவர்களில் நாலில் ஒரு பகுதியினர் உயர்குருதி அழுத்தம், சலரோகம், இதயவருத்தம் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டிருந்தனர் (பெரும்பாலானவர்கள் வைத்தியசாலை கிளினிக் செல்பவர்கள்). எமது நுகேகொட மருத்துவ நிறுவன ஒழுங்கின்படி மோசமான இருதயநோய், உயர்குருதி அழுத்தம், கட்டுப்பாடற்ற சலரோகம், மோசமான நுரையீரல்தொற்று (உதாரணமாக காசநோய்) உள்ளவர்கள் கனரக வாகனங்கள் ஓட அனுமதிக்கப்படுவதில்லை. எனினும், மேற்படி நோய்கள் தகுந்த சிகிச்சைகள் மூலம் கட்டுப்பாட்டில் இருப்பின் ஏனைய வாகனங்கள் ஓட்டுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவர்.

### மதுப்பாவனை, உளவியல் விருத்திக் குறைபாடுகள், வலிப்பு வருத்தம்

சாதாரண உடற்சோதனைகள் மூலம் இவற்றைக் கண்டுபிடிப்பது கடினம். எந்தவொரு விண்ணப்பதாரியும் இவற்றில் ஏதாவது ஒன்றினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் ஒத்துக்கொள்வதில்லை. இவற்றைக் கண்டுபிடிக்க சில நுணுக்கமான முறைகளைக் கையாளுகின்றோம். ஒருவர் மதுபோதையில் வாகனம் செலுத்தும் போது கைதுசெய்யப்பட்டு, மருத்துவ பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்படின் அவருடைய வாகன அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படுவதோடு, கடுமையான தண்டனைகளுககும் உள்ளாவார்.

**Dr. ந. அரவிந்தன்.**

**அனுமதிக்கப்பட்ட வைத்திய அதிகாரி (யாழ். மாவட்டம்) அகில இலங்கை நுகேகொட போக்குவரத்து மருத்துவ நிறுவனம், கொழும்பு.**

உளவியற் குறைபாடு, வலிப்பு வருத்தம் உள்ளவர்கள் உங்களினதும் நீங்கள் சார்ந்த சமூகத்தினதும் நன்மை கருதி வேறு தொழில்களில் ஈடுபடுங்கள்.

இறுதியாக, அன்பான வாகன சாரதிகளே உங்கள் பாதுகாப்பையும், மற்றவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த நீண்டதூர வாகனப் பிரயாணங்களைத் தொடங்குமுன் உங்கள் உடல் திறனையும் வாகனத்தின் செயற்றிறனையும் உறுதிசெய்துகொள்ளுங்கள்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள முச்சக்கர வண்டி (ஓட்டோ) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.விநாயகமூர்த்தி, இராசவீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய் (இராச வீதி தாயகத்துக்கு அருகில்).(24969)

கோல்ட்பிஷ், குரா, ஏஞ்சல் ஆகிய பல வர்ண வளர்ப்பு மீன்கள் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு S.K துரைசிங்கம் (K.R.), 270, கனகரத்தினம வீதி, நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம். T.P. 0602213128. (25032)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: (நல்லூா வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்தி ரைச் சந்தையடி, நல்லூர். (25033)

## திரைப்பட ஒன்றியம் அங்குரார்ப்பணம்

குருநகரில் திரைப்படத்துறையை வளர்க்கும் நோக்குடன் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு அலுவலகத்தில் 'குருநகர் திரைப்படத்துறைசார் ஒன்றியம்' என்னும் அமைப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

குருநகர் திரைப்படத்துறைசார் ஒன்றியத்துக்கான உறுப்பினர்களைப் பதிவு செய்தல், அதற்கான யாப்பை உருவாக்குதல் ஆகிய விடயங்கள் அன்றையதினம் கலந்துரையாடப்படும் எனவும் - ஆர்வலர்கள் இதில் கலந்துகொள்ளலாம் எனவும் ஏற்பாடடாளர்கள் அறிவித்துள்ளனர்.(எ-51)

## ஒளிவிழா

குருநகர்,நவ.25

கொழும்புத்துறை சென்ஜோசப் வித்தியாலய ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மா. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை" வண.பிதா யேசுரட்ணம் அடிகள் பிரதம விருந்தினராகவும் அருட்தந்தை வி.அ. ஜெறோம் அடிகள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ள உள்ளனர். (எ-51)

## ஏனைய துறைகளுடன்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

குட்டிகளோடு எப்படி அவா கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்ற முடியும்?

ஓர் ஆசிரியருக்கு முதல் நியமனம் கஷ்டப் பிரதேசத்தில் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், பட்டதாரி ஒருவர் பட்டம் பெற்றவுடன் நியமனம் பெற்றிருந்தால், அவர் எந்தக் கஷ்டமும் இன்றி வன்னி போன்ற கஷ்டப்பிரதேசத்தில் பணியாற்றியிருக்க முடியும், ஆசிரியர் பற்றாக்குறையும் நீக்கியிருக்கும்.

நகரப் பகுதிப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கு 7,8 வருடங்கள் கழித்து நியமனம் வழங்கப்படுகின்றது. விவாகமாகி குழந்தையுடன் இருக்கும் அந்த ஆசிரியரை கஷ்டப்பிரதேசத்தில் பணியாற்றுமாறு கேட்பது நியாயம் இல்லை.

உரிய காலத்தில் நியமனங்களை வழங்கினால் இந்த நிலை ஏற்பட வாய்ப்பு இல்லை.

*கேள்வி:-* யாழ். மாவட்ட கல்வி வீழ்ச்சிக்கு காரணம் என்ன?

பதில்:- இதற்குப் பல காரணங்கள் உண்டு. பாடசாலை மற்றும் திணைக்கள நிர்வாகங்கள் கவனிக்காத நிலையும் உள்ளது. முறையான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாமையும் ஒரு காரணம். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பழைய பாடத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்கள், புதிய பாடத்திட்டத்தின் கீழ் கல்விப்போதனைகளை முழுமையாக மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். புதிய திட்டத்தின் கீழ் போதனை செய்யும் போது அவர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக உள்ளது.

*கேள்வி:-* இராணுவ நெருக்கு வாரங்கள் கல்வி வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றனவா?

*பதில்:-* இராணுவ நெருக்குவாரங்கள் மாணவர்களின் மனநிலையைப் பாதிக்கும் பல பாடசாலைகளுக்கு பெறறோர், பழைய மாணவர் செல்லமுடியாத நிலை உள்ளது. விளையாட்டு மைதானங்களில் இயல்பாக விளையாட முடியாதுள்ளது. இவையும் கல்வி முன்னேற்றத்தைப் பாதிக்கின்றன.

*கேள்வி:-* யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் அடிதடிகளில் மாணவர்கள் சம்பந்தப்படுவது குறித்து....?

*பதில்:-* நீண்ட காலமாக எவரது கவனிப்பும் இல்லாது இருந்ததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதைத் தடுக்கும பணியை தனியாக ஒரு பகுதியினரோ, பாடசாலைகளோ மேற்கொள்ள வேணடும் என்றிருக்கக் கூடாது. சகலரும் ஒட்டுமொத்தமாக இந்நிலை நீடிப்பதைத் தடுக்க பங்களிக்க வேண்டும்.

கல்விமான்களை உள்ளடக்கிச் செயற்படும் கல்வி மேம்பாட்டுப் பேரவை மூலம் இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

*கேள்வி:-* சமூகச் சீர்கேடு நடவடிகையான 'ராகிங்' கூட தொடர்வதாகக் கூறப்படுகின்றதே அது பற்றி.....?

*பதில்:-* அதுபோன்ற தேவையில்லாத செயற்பாடுகள் எல்லாம் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். இதற்கு சகலரின் ஒத்துழைப்பும் தேவை. தனியாக சட்டம் போட்டு, தண்டனை விதித்து இவற்றுக்குத் தீர்வுகாணமுடியாது.

## பாராட்டுதல்



கொடிகாமம். கச்சாய் பிரதேசத்தில் வெள்ளாம்போக்கட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்

**திரு.இராமு கந்தையா**

*அவர்கள் நீதி அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுக் கடந்த 31.10.2003 அன்று யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.*

*சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் டீ.ஏ.எம். பட்டதாரியுமாகிய இவர், 30 வருடங்கள் அரச சேவையில் வைத்தியராக இருந்து ஓய்வுபெற்றவர். தற்போது தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கத்தின் கௌரவ செயலாளராகக் கடமையாற்றி வருகின்றார். அன்னாருக்கு இச்சங்க நிர்வாகக் குழு பாராட்டு ஒன்றை 23.11.2003 அன்று வழங்கியது. எமது சங்கம் இவரின் சேவையை அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் இவரின் பணி மேன்மேலும் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.*

தலைவர், உறுப்பினர்கள்,
தென்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச் சங்கம்,
சாவகச்சேரி.

(25034)(34-21-12)

## 9 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

'திலகாபுரி', அல்வாய் வடக்கைச் சேர்ந்த
நவரட்ணம் - திலகா தம்பதிகளின்
செல்வப் புதல்வி

**செல்வி விதுர்ஷா**



அவர்கள் தனது 9ஆவது பிறந்த தினத்தை இன்று (25.11.2003) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலத்துடன் கொண்டாடுகின்றார்.

இவரைக் லண்டனில் இருக்கும் அப்பா, அம்மா, அக்காமார் ஜனனி, நளினி, மாதுரி, சந்துஜா, துசிதா, மலர்விழி, நளாயினி, றஜிதா மற்றும் அண்ணாமார் இமையவன், தூயவன் (லண்டன்), நிஷாந், ருபேஷ், ருதீஷ், அத்தைமார் ரவி, மதி, உதயா மற்றும் அத்தான் பிரதீபன், மகள் பிரதியுசா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் இறைவன் திருவருள் நலத்தி னால் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

- அப்பா (லண்டன்)

'திலகாபுரி',
அல்வாய் வடக்கு.

(25023) (14-12-21)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### பொதுப் பட்டமளிப்பு -2004.01.24

கலாநிதி/முதுமாணி/பட்டங்கள் டிப்ளோமா ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 24.01.2004இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் பட்டங்கள் பெற தகுதியுடையவர்கள் 10.12.2003ஆம் திகதிக்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல்வேண்டும்.

01. கலாநிதித் தேர்வு
02. முதுதத்துவமாணித் தேர்வு
03. முதுமாணித் தேர்வு
04. கல்வி முதுமாணித் தேர்வு
05. பட்டப்பின் கல்வி டிப்ளோமாத் தேர்வு
06. பட்டப்பின் பொது நிர்வாக டிப்ளோமாத் தேர்வு
07. வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு
08. சித்த வைத்தியமாணி, சத்திரசிகிச்சைமாணித் தேர்வு
09. வணிகமாணித் தேர்வு
10. தொழில் நிர்வாகமாணித் தேர்வு
11. விஞ்ஞானமாணித் தேர்வு (பொது/சிறப்பு)
12. கலைமாணித் தேர்வு (பொது/சிறப்பு)
13. இசை நாட்டிய கலைமணித் தேர்வு
14. நுண்கலைமாணித் (இசை/நடனம்/ சித்திரமும் வடிவமைப்பும்) தேர்வு
15 விவசாய விஞ்ஞானமாணித் தேர்வு
16. விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணித்தலும்)
17. விஞ்ஞானமாணி (சுற்றாடல் விஞ்ஞானம்)
18. தொழில் நிர்வாகமாணி (முகாமை கற்கைகள்)
19. தொழில் நிர்வாகமாணி (கணக்கியலும் நிதியும்)

(16–19: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம்.)

20. கலைமாணி

வேண்டுகோள் படிவங்களையும் மற்றும் விவரங்களையும் முத்திரை ஒட்டிய 23x10 செ.மீ. அளவுடைய சுயவிலாசமிடப்பட்ட கடித உறையை "உதவிப் பதிவாளர், தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் நேரடியாக வந்தோ பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

வேண்டுகோள் படிவங்களை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

01. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
வவுனியா வளாகம்.
புகையிரத நிலைய வீதி.
வவுனியா.

02. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
கொழும்பு களஞ்சிய. காரியாலயம்
EG 4. மத்திய வீதி.
கொழும்பு - 12

-பதிவாளர்.

(சி-31468) (21-12-15)

## 19 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளில்...

**தர்மரத்தினம் புவீந்திரன்** (புவி)



தோற்றம் 22.09.1964 | அழிப்பு 25.11.1984

*"கர்த்தாவே. என் சத்துருக்கள் என்னை மேற்கொண்டு மகிழவொட்டாமல். நீர் என்னைக் கைதூக்கி எடுத்தபடியினால். நான் உம்மைப் போற்றுவேன்."*

சங்கீதம் 30:1

என்றும் நினைவு கூரும்:
தாய், சகோதரி, சகோதரர்கள்.
மைத்துனிமார், மருமகள்மார்.
பேரமகன்மார்.

*தொல்புரம் மத்தி.*
*சுழிபுரம்.*

(24733) (30-21-12)

### விற்பனைக்கு

கையடக்கத் தொலைபேசி (சிம்) இணைப்புடனும் இணைப்பின்றியும் விற்பனைக்குண்டு.

சகல விதமான பழுதுற்ற கையடக்கத் தொலைபேசிகள் யாவும் திருத்தியும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 0777 570138

### வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல கல்வி நிறுவனம் ஒன்றுக்கு யாழ் நகரப் பகுதியில் பொருத்தமான கட்டடம் ஒன்று வாடகைக்குத் தேவை.

விளம்பர இல. 2105
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.




உலகப் புகழ் பெற்ற L.G
தொலைக்காட்சிப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

யாழ்ப்பாணம்

# உருளைக்கிழங்கு செய்கைக்கு மாற்றீடாக பீற்றூட், மிளகாய் செய்கையில் ஈடுபடுக!

**யாழ்.**மாவட்டத்தில் பெரும் போகத்தில் (ஐப்பசி - பங்குனி) விவசாயிகள் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபடுதல் வழமையாகும். இப்போகத்தில் நிலவுகின்ற காலநிலை சாதகமாக அமைவதால் இப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இதே காலங்களில் தென்மாகாணங்களிலும், வெளிநாடுகளான இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால், தை, மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் கூடுதலான உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு வருகின்றது.





கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு எமது மாவட்டத்திலேயே விற்பனை செய்யப்பட்டு, அதன்மூலம் விவசாயிகள் கணிசமான அளவு நிகர லாபம் பெறும் நிலை காணப்பட்டது. தற்போது நடைமுறையிலுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையின்படி, தென்மாகாணத்தில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு உருளைக் கிழங்கு கொண்டுவருதலை தடைசெய்யமுடியாத நிலை காரணமாகவும் உருளைக்கிழங்குகின் சந்தை விலையினைத் தீர்மானிக்கமுடியாத நிலை காரணமாகவும் இந்தப் பெரும் போகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலப் பரப்பிலேயே உருளைக் கிழங்கை செய்கை பண்ணுமாறும் விவசாயிகளுக்கு ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயశ్రీ

எனவே, மட்டுப்படுத்தப்பட்ட இந்த நிலப்பரப்பைத் தவிர ஏனைய விளை நிலங்களில், கீழ்வரும் பயிர்ச்செய்கை முறைகளை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

**அ.பீற்றூட், வெங்காயம், மிளகாய் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்:-**

எமது மாவட்டத்திற்குத் தேவையான செத்தல் மிளகாய் போதியளவு இங்கு உற்பத்தி செய்யப்படாததனால் இப்பயிர்ச் செய்கையில் கூடுதலாக ஈடுபடுமாறு அறிவுரை வழங்கப்படுகிறது.

பீற்றூட், வெங்காயம் ஆகிய விளைபொருள்களுக்கு மற்றைய மாவட்டங்களில் சந்தைவாய்ப்பு இருப்பதனால் இவற்றையும் பயிர் செய்வதற்கு சிபாரிசு செய்யப்படுகின்றது.

**ஆ. சணலை விதைத்துப் பூக்க ஆரம்பிக்கும்போது மண்ணினுள் புதைத்து இந்தக் காணிகளில் வெங்காயம், மிளகாய் பயிரிடல:-**

சணல்பயிர் சேதனப் பசளையாக மண்ணை வளமானதாக்குவதானால் பயிர் உற்பத்திச் செலவையும் குறைக்கின்றது. விவசாயிகள் மாட்டெரு, கோழியெரு போன்ற சேதனப் பசளைகளுக்கு கூடியளவு செலவழிப்பதற்கு மாறறீாக, சணலையும் மற்றைய பசுந்தாட் பசளைகளையும் கூட்டெருவையும் தயாரித்துப் பாவிப்பதன மூலம் பயிர்ச்செய்கைச் செலவைக் குறைப்பதற்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

**(இ) முந்திரிகைச் செய்கையில் ஈடுபடுதல்:-**

தற்போது முந்திரிகைப் பழத்திற்கு நல்ல கிராக்கி இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் 20 வருடங்களுக்கு முன்பு 280 ஹெக்டேயர் விஸ்தீரணத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த முந்திரிகை, இடப்பெயர்வு காரணமாக பாரிய வீழ்ச்சியடைந்து இப்போது மீண்டும் புதிய நடுகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ச. சின்னத்துரை**
**உதவி விவசாயப் பணிப்பாளர்**
**(விரிவாக்கம்),**
**யாழ்ப்பாணம்.**

தற்போதைய விஸ்தீரணம் 30 ஹெக்டேயராகும். எனவே, முந்திரிகைச் செய்கையும் ஓர் இலாபகரமான தொழிலாக அமைகின்றது.

மேற்படி பயிர்ச்செய்கைகளில மேலதிக விவரங்களை அறிந்து கொள்வதற்கு தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்புகொள்ளுமாறு விவசாயிகள் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர். ★

## களையெடுப்பதற்கு ஆள்பெறுவதில் சிரமம்

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ். மாவட்டத்தில் தற்போதைய காலபோக செய்கைக் காலத்தில் நெல் வயல்களிலுள்ள களைகளைப் பிடுங்குவதற்கு ஆள்கள் பற்றாக்குறை நிலவுவதாக விவசாய வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம், செம்மணி, வலி. தென்மேற்கு, வலி. மேற்கு, வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில இவ்வருடம் களைகளை பிடுங்குவதற்கு ஒரு நாளைக்கு ரூ. 90 முதல் ரூ. 100 வரை பெண் ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படுகிறது.

எனினும், விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான ஆள்களைப பெறுவது சிரமமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

நெற்பயிரில் வளர்ந்த நிலையில் உள்ள கோழிச்சூடன், நெற்சப்பி என்பன எந்தக் களைநாசினிகளும் அழியும் நிலையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,கடந்த சில தினஙகளாகப்பெய்த மழையினை அடுத்து நாவற்குழிப் பகுதியில் உள்ள நெல வயல்களில் களைபிடுங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த மூன்று வருடங்களாக செய்கை பண்ணப்படாமல் இருந்த இந்த வயல்களில் இம்முறை களைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் களைகளைப் பிடுங்குவதற்கு அதிக பணம் செலவாகும் எனவும் அப்பகுதி நெற்செய்கையாளர்கள் தெரிவிகின்றனர்.2000 ஆம் ஆண்டு குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து அப்பகுதி மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்திருந்தனர். இதனால் நெல்வயலகள் செய்கை பண்ணப்படாமல் இருந்தன. (ம-10)

# பெரும் பயன்தரும் வைக்கோல் பசளை

**தற்போது எமது நாட்டில் உற்பத்திசெய்யப்படும் அரிசி எமது தேவைக்கு அதிகமானது. எனவே, இந்த அரிசியை வெளிநாடுகளுக்கு விற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், உலகச் சந்தையில் எமது அரிசியின் விலை அதிகமாக இருப்பதால் வெளிநாடுகள் எமது அரிசியைவாங்க பின்னடிக்கின்றன. எனவே, இரசாயனப் பசளைகளைத் தவிர்த்து வைக்கோலைப் பசளையாகப் பயன்படுத்தினால் அரிசியின் உற்பத்திவிலை மிகவும் குறையும். அதேநேரம் வயல் நிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாது. இது தொடர்பான தகவல்களை இங்கு தருகின்றோம்.**

80 களின் மத்தியில் ஆரம்பமான சைனீஸ் ஹோட்டல் கலாசாரங்களாக இந்நாட்டில் இருந்து வந்துள்ள பரம்பரையான உணவுப் பழக்கவழக்கங்கள் முற்றிலும் மாறுபட்டன. சோற்றை உண்பதால் உடல் பருமனாகும் என்றும், நீரிழிவு ஏற்படும் என்றும் அதனால், கூடியவரையில் சோறு உண்பதைத் தவிர்த்தலே சிறந்தது என்ற கருத்தை ஒரு தெய்வவாக்காக எமது மக்களின் மனங்களில் பதிய வைப்பதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் பகீரதப்பிரயத்தனங்களை மேற்கொண்டன. வெளிநாட்டு நிறுவனங்களின் முயற்சிகள் எத்துணை தீவிரமானது என்பது, தேங்காய் எண்ணெய் விசத்தன்மையானது என்று ஒதுக்கப்பட்டதிலிருந்து புலனாகிறது. இறக்குமதியான எண்ணெய் வகைகள் எமக்குப் பாதுகாப்பு அளிப்பவையாக மாறின. மேற்கத்திய நிறுவனங்களின் இந்த முயற்சிகள் இந்திய வர்த்தகச் சந்தையை வெற்றிகொள்வதற்கு மாத்திரமேயாகும். ஏனெனில், இந்திய வர்த்தக சந்தைவாய்ப்பைக் கைப்பற்றுவதன்மூலம் இலங்கையின் வர்த்தக சந்தைவாய்ப்புக்களை நிரந்தரமாக்கிக்கொள்ளமுடியுமென்று அவர்கள் நம்பினர்.

இலங்கையில் இம்முறை சிறுபோகச் செய்கையின் மூலம் பெறப்பட்ட நெல்லின் தொகை சுமார் 15 லட்சம் மெற்றிக்தொனகளாகும். கடந்த பெரும்போகத்தால் சுமார் 20 லட்சம் மெற்றிக் தொன் விளைச்சல் பெறப்பட்டுள்ளமையால் இன்று நெல் தேவைக்கு அதிகமாகத் தேங்கியுள்ளது. மூன்றுவேளையும் சோறு உண்ணும் ஞாபகம் இப்போதுதான் எமக்கு ஏற்பட்டுள்ளது. மூன்று தசாப்தங்களாக காலையிலும் இரவிலும் மாப்பண்டங்களை உண்ணப்பழகிய எமது நாட்டுமக்களுக்கு இன்று சோற்றை ஞாபகப்படுத்திய மாத்திரத்தில் அதை உண்ண முற்படுவார்களா என்பது சந்தேகத்துற்குரியதே.

இந்நிலையை எதிர்கொள்வதற்கு அரிசியைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதே சிறந்த வழியாகும். அதிலுள்ள சிக்கல் யாதெனில், இந்தியா, பர்மா, தாய்லாந்து போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் அரிசியின் விலையைவிட எமது அரிசியின் விலை அதிகமாக உள்ளதே.

இந்தியாவில் ஒரு மெற்றிக் தொன் அரிசியின் விலை சுமார் 160 அமெரிக்க டொலர்களாகும். பர்மா, தாய்லாந்து போன்ற நாடுகளில் அரிசியின் விலை சுமார் 180 அமெரிக்க டொலர்களாக உள்ளது. ஆனால், இலங்கை அரிசியின் விலை, ஒரு மெற்றிக் தொன் சுமார் 220 அமெரிக்க டொலர்களாக உள்ளது. இது மிக அதிகரித்த தொகையாகும். பிறநாடுகளுக்கு எமது அரிசியை ஏற்றுமதி செய்வதாயின் உலகச் சந்தையில் போட்டிபோடும் நிலைக்கு எமது அரிசியின் உற்பத்தி விலை அமைந்திருக்கவேண்டும். அது சாத்தியமாவதற்கு தற்போது நாம மேற்கொண்டுவரும் செய்கை முறைகளில் மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும்.

ஒரு கிலோ அரிசியின் உற்பத்திக்கான செலவை மிகவும் குறைப்பதாயின் உர வகைகளுக்கு செலவிடப்படும் தொகையைக் குறைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வது அவசியமானது. இம்முறை சிறுபோகச் செய்கையின் போது 10 லட்சம் மெற்றிக் தொனகளையும்விட அதிகமான அளவு வைக்கோல் பெறப்பட்டுள்ளது. இந்த வைக்கோலில் பெருமளவிலான நைதரசன் மற்றும் பொட்டாசியம் என்பன அடங்கியுள்ளன. அதைத் தவிர பொஸ்பரஸ், சிலிக்கன் மற்றும் வேறுபல மண்ணுக்குத் தேவையான அதிகளவு போசாக்குக் கொண்ட மூலப்பொருளகளும் அடங்கியுள்ளன. ஆயினும, இப்பயன்பாடுகளை எம்முள் எத்தனை பேர் அறிந்துள்ளார்கள் என்பதே கேள்வியாகும்?

இன்றைய பெரும்பாலான விவசாயப் பெருமக்கள் அறுவடையின் பின்னர் பெறப்படும் வைக்கோலைத் தீயிட்டுக் கொளுத்துவதை வழக்கமாகவே கொண்டுள்ளனர். இதைத் தடுப்பதற்காக வைக்கோலைக் கொளுத்துபவர்களுக்கு எதிராகச் சிறைத்தண்டனை வழங்குவதற்கான சட்ட



மொன்றை உருவாக்குவதற்கு விவசாய மற்றும் கால்நடை வளங்களுக்கான அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. உண்மையில் இது இக்காலத்திற்கு உகந்த செயலாகும.

பெருமளவில் நெற்செய்கையை மேற்கொள்ளும் ஜப்பான்கூட வைககோலை உரமாகப் பெருமளவில் பயன்படுத்துகிறது. சுமார் நாலரை நூற்றாண்டுகளாக பிறநாட்டு அடிமைத்தளையில் அகப்பட்டிருந்த நாம், இன்று பிற்போககான சிந்தனைகளையே கொண்டுள்ளோம். வர்த்தக சக்திகளால் எமது விவசாயிகள், அப்பாவிகளாக நசுக்கப்பட்டுள்ளனர். அச்சக்திகளால் எமது விவசாயிகள் இலாபமீட்டும் சூழலிலிருந்து புறம தள்ளப்பட்டுள்ளனர். இதன் மூலம் பரம்பரையாக கையாளப்பட்டு வநதுள்ள பாரம்பரிய முறைகள் எம்மை விட்டு விலகியுள்ளன. தெரிந்தோ, தெரியாமலோ நாமனைவருமே இதில் அகப்பட்டுள்ளோம்.

வைக்கோல் கொளுத்தப்படுவதன் மூலம், அவற்றில் அடங்கியுள்ள பெருமளவிலான கனிப்பொருள்கள் அழிந்து விடுகின்றன. கொளுத்தப்பட்ட வைக்கோலின் சாம்பலில் கணிசமான அளவில் பொட்டாசியம் உள்ள போதிலும், மழையினால் அவைகள் தரையினின்றும் கழுவப்பட்டு வெளியேற்றப்படுகின்றன.

நெற்பயிரில் காணப்படும் விசேடத்தன்மை, தான் கிரகித்துக் கொள்ளும் போசாக்குகளின் பெரும்பகுதியைத் தனது தண்டுகளிலும் வேர்த்தொகுதியிலும் சேமித்து வைத்துக்கொள்வதாகும. வைக்கோலில் அடங்கியுள்ள இப போஷாக்குகளை மீண்டும் வயலுக்கு இடமுடியுமானால், அது பயனையே விளைவிக்கும். 80புசல் விளைச்சலைக் கொண்டுள்ள வயலொன்றிலிருந்து பெறப்படும் வைக்கோலின் அளவு 1,850 கிலோகிராமாக இருக்கும். அறுவடையின் பின்னர் வயலில் எச்சங்களாக உள்ள நெற்பயிரின் அடிக்கற்றைகளின் அளவை நூற்றுக்கு 30%மாகக் கொள்ளும போது, அறுவடையாக வெளியேற்றப்பட்ட வைக்கோலின் அளவு 1,300 கிலோ கிராமாக அமையும். வைக்கோலில் பொட்டாசியம் (K) 2வீதமும் நைதரசன்(N) 0.8வீதமும் அடங்கியுள்ளதோடு, சிலிக்கனும் (Si) குறிப்பிட்ட அளவு அடங்கியுள்ளது. இதற்கமைய 80 புசல் நெல்லை விளைச்சலாகப் பெறக்கூடிய வயலொன்றிலிருந்து வெளியேற்றப்படும் வைக்கோலில், பொட்டாசியம் 26கிலோவும், 11கிலோ நைதரசனும் அடங்கியுள்ளன. வைக்கோலை முறைப்படி பசளையாகப் பிரயோகிப்பதால் அதிலிருந்து, இரசாயன உரத்திலிருந்து பெறப்படும் 30வீதமான நைதரசனையும் 100வீதம் கொண்ட பொட்டாசியத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதைத்தவிர, சிறு அளவு கொண்ட சிலிக்கன் மற்றும் பொஸ்பரஸையும் பெற்றுக்கொள்ள முடியும். அதுபோன்றே, மண்வளத்துக்கான மூலப்பொருள்களையும் பெறமுடியும்.

வைக்கோலை நேரடியாக வயலுக்கு இடுவதால் ஏற்படும் சிக்கல் யாதெனில், வைக்கோல் உக்கிபோவதற்கு அதிக காலம் எடுக்கும எனவே, வைக்கோலை காபன பசளையாக, அல்லது விரைவில் உக்கிப் போகக்கூடிய விதமாக வயலுக்கு இடுவதன்மூலம், இச்சிககலைத் தீர்க்கமுடியும். இதைச் சேற்றுப் பசளையாக இடுவதன் மூலம் அதைக் காபன் உரமாக மாற்றமுடியும்.

வைக்கோலைப் பசளையாகப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு அநேக நன்மைகள் கிடைக்கின்றன. வயல்களில் நீரைச் சேமித்துவைத்துக்கொள்வதற்கு அது பெரிதும் உதவுகிறது; மண் அரிப்பைத் தடுக்கிறது. தொடர் போகங்களாக செய்கை மேற்கொள்ளப்படும்போது செய்கைத தரை வளமுள்ள மென்மையான தரையாக மாறுகிறது. சூரிய வெப்பத்தின் தாக்கத்தை நிலைகொள்ளவிடாது. தரையைக் சீரான வெப்பநிலையில் வைத்திருப்பதற்கும் வைக்கோல் பெருமளவில் உதவுகிறது; நைதரசன் ஆவியாக மாறுவதைக் குறைக்கிறது; மண் புழுக்களின் செயற்பாட்டை அதிகரிக்கச் செய்கிறது.

தொகுப்பு: சரா

அதேபோன்று, மண்வளத்துக்கான நுண்ணுயிர்களின் செயற்பாடு சிறப்பாக நடைபெற உதவுகிறது. மண்ணின் மேற்படை மென்மையானதாகமாறுகிறது. களைகள் வளர்வதையும் பரவுவதையும் தடுக்கிறது. மண்ணில் காற்றோட்டம் சீராக இருக்கும். சிலபோகங்களைத் தொடர்ச்சியாக செய்வதன மூலம், நெற்பயிருக்குத் தேவைப்படும் பூரணமான போஷாக்கினைப பெறமுடியும். நெற்பயிரின் வேர்த்தொகுதி, தண்டு மற்றும் இலைகள் முறையான போஷாக்கினைப் பெற்று கொழுத்த பயிராக விளைவதால் நோய்களும் கிருமித்தாக்கங்களும் மிகக் குறைவாகவே இருக்கும். இதனால் நோய்க் கட்டுப்பாட்டுக்காக கிருமி நாசினிகளுக்கு விரயமாகும் பணமும் மீதமாகும். இதன்மூலம், வைக்கோலைப் பசளையாக இடுவதால ஒரு கிலோ நெல்லுக்கான உற்பத்திச் செலவைக் குறைக்க முடியுமென்பதும் புலனாகின்றது. எனவே, இத்தகைய நன்மைகளைப பெறுவதற்கு நம்நாட்டு விவசாயப் பெருமக்கள் இதில் கவனமெடுப்பது அவசியமாகியுள்ளது. ★

# கௌரவத்துக்குரிய மாவீரர்களின் பெற்றோர்களே! உரித்துடையவர்களே!

## கார்த்திகை - 27 இல் மாவீரர் துயிலும் இல்லம்

# வாருங்கள்.....! வாருங்கள்.....!!

தமிழ்மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காகவும், பாதுகாப்புக்காகவும்,
கௌரவத்திற்காகவும்
தமது இன்னுயிரை அர்ப்பணித்தவர்கள் இந்த மாவீரர்கள்!
இந்தத் தன்னலமற்ற தியாகிகளை உருவாக்கித் தந்த மாவீரர் பெற்றோர்களே!
உரித்துடையவர்களே! உங்கள் பாதங்கள் பணிகிறோம்.
தாயக விடுதலைக் கனவோடு உங்கள் பிள்ளைகள் உறங்குகிறார்கள்.
உங்கள் பிள்ளைகளோடு சங்கமித்துக்கொள்ள மாவீரர் துயிலும் இல்லம் வாருங்கள்
என அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

**காலம்: கார்த்திகை 27** **நேரம்: பிற்பகல் 3 மணி**

## மாவீரர் துயிலும் இல்லங்கள்

வடமராட்சி: **எல்லங்குளம்** தென்மராட்சி: **கொடிகாமம்**

வலிகாமம்: **கோப்பாய்** தீவகம்: **சாட்டி**

*ஏனைய மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் செல்வோர் அருகிலுள்ள*
*விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலகங்களில் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறோம்.*

**எமக்கொரு நாடு வேண்டும்**
**எம்மக்களுக்கு விடுதலை வேண்டும்**
**எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும்**
**என ஆக்ரோசமாக, இலட்சிய வேட்கையுடனேயே**
**மாவீரர்கள் களத்தில் வீழ்கிறார்கள்.**
**எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும்**
**எமது நாட்டின் விடுதலையை முரசறையும்**
**வீர சுதந்திர பிரகடனமாகவே சம்பவிக்கிறது.**

— *மேதகு வே.பிரபாகரன்,* தமிழீழ தேசியத் தலைவர்

அரசியல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ்ப்பாண மாவட்டம்.



# இவர்களா வரைந்தார்கள்?

# வியப்பை ஏற்படுத்திய கண்காட்சி

க.ரசிகன்

யாழ்ப்பாண கல்வி வலயம்- யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் கோப்பாய் ஆகிய கோட்ட பாடசாலை மாணவர்களின் ஓவியக் கண்காட்சியொன்றை யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் கலைக்கூட மண்டபத்தில் அண்மையில் நடத்தியது. ஐந்து நாள்கள் இந்தக் கண்காட்சி இடம் பெற்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கண்காட்சி மண்டபம் திறக்கப்பட்டிருந்தது.

ஓவியக் கண்காட்சியினை யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்துவைத்தார்.



மாணவர்கள் மத்தியில் சித்திர பாடத்தில் ஆர்வத்தினைத் தூண்டும் வகையில் காட்சிப்படுத்தப்பட்ட இக் கண்காட்சியினை ஏராளமான மாணவர்கள் பார்வையிட்டனர். யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் ஒவ்வொரு பாடசாலைகளில் இருந்தும் தரம் - 4, 5 வகுப்புகள் முதலாம் பிரிவாகவும் 6, 7, 8 வகுப்புகள் இரண்டாம் பிரிவாகவும், 9, 10, 11 வகுப்புகள் மூன்றாம் பிரிவாகவும் தரம் 12, 13 வகுப்புகள் நான்காம் பிரிவாகவும் வகைப்படுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவ்வவ் கோட்டங்களில் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களது ஓவியங்களும் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. மொத்தம் 400 மாணவர்கள் வரையில் கண்காட்சியில் பங்குபற்றினர்.

மாணவர்களிடையே இலை மறைகாயாக இருந்த ஆற்றல் கண்காட்சி மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

மாணவர்களின் உள்ளக்கிடைக்கைகளில் ஆழமாக இருந்த உணர்வலைகளை அவர்கள் ஓவியம் மூலம் கொட்டியிருந்தார்கள். சமாதானத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்களதும் தங்களதும் நிலையினையும், உணர்வினையும், கடந்தகால போர் தமிழ் இனத்துக்கு வழங்கிய துன்பநிலைமைகளையும், அதனால் எம்மவர் பட்ட இன்னல்களையும் கண்காட்சியில் இருந்த ஓவியங்கள் கட்டியங் கூறின. போரும் சமாதானமும் மாணவர்களை எவ்வளவு தூரம் பாதித்துள்ளன என்பது, பார்ப்போர் மனதை நெருடியது.

போர், சமாதானம் மட்டுமன்றி ஆன்மீகத்தைப் புலப்படுத்தும் ஓவியங்களும், இயற்கையினுடைய அழகுக் கோலங்களை தத்துருபமாக வெளிப்படுத்தும் ஓவியங்களும் அங்கு அழகுகாட்டின.



தரம் 4, 5, 6 மாணவர்களின் ஓவியங்களைப் பார்க்கும்போது இவர்களா இதனை வரைந்தார்கள் என்ற ஆச்சரியம் மனதில் எழுந்தது. அவ்வளவு ஆழமாக தத்துருபமாக சிறியவர்கள் என்றாலும் பார்ப்பவரை கவரக் கூடிய வகையில் அவற்றை அவர்கள் வரைந்திருந்தார்கள். குடாநாட்டில் இவ்வாறு ஆற்றல் மிக்க இளம் சமூகம் ஒன்று உள்ளது என்பது மனதுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

கண்காட்சியைப் பார்வையிட வருகின்ற பெற்றோர் தமது பிள்ளைகளையும் அழைத்து வந்து ஓவியங்களினுடைய தன்மை பற்றி தம்பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்தினார்கள்; விளங்கப்படுத்தியதைக் கண்டோம். இக்கண் காட்சி எவ்வளவு தூரம் மாணவர்களுக்குப் பயனுடையதாக அமைந்திருந்தது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

இக்கண்காட்சியின் நோக்கம் பற்றி ஏற்பாட்டாளர்களில் ஒருவரான யாழ். கல்விவலய சித்திரப்பாட ஆலோசகர் நா.சுந்தரலிங்கம் அவர்களிடம் பேசினோம்.

"இன்று சித்திரப் பாடமென்றால் மாணவர்களிடையே வெறுப்புத்தன்மையொன்று ஏற்பட்டுள்ளது. சித்திர பாட ஆசிரியர்களுக்கு பெரியளவில் பற்றாக்குறை இருக்கின்றது. இதற்கு மூலகாரணம், மாணவர்கள் ஆரம்பத்திலேயே சித்திரப் பாடத்தினைப் புறந்தள்ளுவதே ஆகும்.



"சித்திரப் பாடத்தில ஆர்வத்தினையும் பிடிப்பினையும் உண்டுபண்ணவே இக்கண்காட்சியை யாழ். கல்வி வலையம் ஏற்படுத்தியுள்ளது." என்று அவர் எமக்கு விளக்கினார்.

தொடர்ந்து இக்கண்காட்சியில் பங்குபற்றிய போட்டியாளர்களில் ஒருவரான கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கற்கும் ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவன் பிரதீபனை அணுகிக் கதைகொடுத்தோம்.

"என்னுடைய கல்லூரியில் 30 பேர் சாதாரணதர வகுப்பில் படிக்கின்றார்கள். ஆனால், 7 பேர் மட்டுமே சித்திர பாடத்தினைக் கற்கின்றோம்" என்று கூறி எமக்கு அதிர்ச்சி கொடுத்தார் அவர்.

"இக்கண்காட்சி இம்முறை சாதாரணதரப் பரீட்சையை எதிர்நோக்கும் என்னைப்போன்று சித்திர பாடத்தினைக் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் பிரயோசனமாகவும் பயனுள்ளதாகவும் அமையும்" என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

யாழ். கல்வி வலையம் ஒழுங்கு செய்திருந்த இந்த ஓவியக் கண்காட்சி உண்மையில் மாணவர்களிடையே மறைந்திருந்த உணர்வுகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வந்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

இப்போட்டிகளில் காட்சிப்படுத்தியுள்ள மாணவர்களின் சிறந்த ஓவியங்கள் தெரிவு செய்யப்பட்டு முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மாணவர்கள் மத்தியில் அவர்களின் ஆற்றல்களை மேலும் மேலும் வளர்க்கத்தக்க இத்தகைய நிகழ்வுகள அடிக்கடி நடத்தப்படுவ தும் வரவேற்கப்படுவதும் அவசிய மானவையே.

# முதியோருக்கு உதவும் இனிய இதயங்கள்...

செல்வராஜா ரமேஷ்

ஏ - 9 வீதியில் அமைதியின் நிழலில் ஆடம்பரமின்றி இயங்குவது கைதடி சாந்தி நிலையம்.

கைதடி அரச முதியோர் இல்லம் இன்று 180 இற்கும் மேற்பட்ட ஆண் - பெண் முதியோரை அரவணைத்துக் கொண்டு செல்கின்றது.

வாழ்வின் இறுதிக்கால கட்டங்களில தங்களது வாழ்வு நிம்மதியாக இருக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்ந்து வருபவர்கள் இந்த முதியவர்கள்.

வைத்திய ஆலோசனையின் பிரகாரம் சிகிச்சைகள், உணவுகள் மற்றும் பிற நலச்சேவைகள் கைதடி இல்ல முதியோர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

சாந்தி நிலையத்தின் அத்தியட்சகராக கே.வி.சிவனேசன் முழுமனதோடு சேவையாற்றி வருகின்றார்.

ஒவ்வொரு முதியவர்களது நலன்கள் தொடர்பாகவும் - அவர்களுக்கு வழங்கவேண்டிய சிகிச்சை, உணவு தொடர்பாகவும் அக்கறையுடன் செயலாற்றுபவர் அவர்.

மேற்படி முதியோர்களுக்கென ஒவ்வொரு தீபாவளி தினத்தன்றும் மானிப்பாய் இனிய இதயங்கள் அமைப்பு (IHO) பல உதவிகளையும் பல நலத்திட்டங்களையும் முன்வைத்து செயற்பட்டு வருகின்றது.

மேற்படி இனிய இதயங்கள் அமைப்பு சாந்தி நிலையத்தில் கடந்த 3 வருடங்களாக நலச்சேவைகளை தீபாவளி தினத்தன்று வழங்கி வருகின்றது. அன்றைய தினத்தை தமக்கென ஒதுக்கி அந்நாளில் அவர்களுக்கு விசேட உணவு, குளிர்பானங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கி வருகின்றது.



தீபாவளி தினத்தன்று இனிய இதயங்கள் அமைப்பினால் முதியோருக்கென நடித்துக் காண்பிக்கப்பட்ட 'இன்பமுமாய் துன்பமுமாய்' எனும் நாடகத்தின் ஒரு காட்சி.

முதியோரை சிந்திக்க வைக்கும் நோக்குடன் அன்றைய தினத்தில இசை நிகழ்வுகளையும், நாடகங்களையும் நடத்திவருவது வழக்கம்.

இந்த வகையில், இவ்வருடம் 'இன்பமுமாய் துன்பமுமாய்' எனும் உணர்வுபூர்வமான நாடகம் தீபாவளி தினத்தன்று அளிக்கை செய்யப்பட்டது. நாடகம் எல்லோரது மனதையும் ஈர்த்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு முதியோர்களை, எமது உறவுகளை சிந்திக்கவைக்கவும் அவர்களை ஒரு கணம் அல்லது ஒரு நாள் சந்தோசப்படுத்தவும் இனிய இதயங்கள் அமைப்பைப் போல ஏனைய பொது அமைப்புக்களும் முன்வர வேண்டும்.

இன்று வடபகுதிக்கு எத்தனையோ வெளிநாட்டவர்கள் தமது உறவுகளையும் தமது நண்பர்களையும் பார்வையிட யாழ். வந்து செல்கின்றனர்.

அதேவேளையில் 'உதவியில் உதவி' வழங்கவென பல அரசசார்பற்ற நிறுவனங்களும் (NGO'S) , தொண்டு நிறுவனங்களும் இத்தகைய உதவிகளைச் செய்வதற்கு முன்வரவேண்டும்.

வயதில் முதிர்ந்தவர்களுக்கு வாழ்க்கையில் நல்வாழ்வுக்கு வழி வகுப்பது கடவுளுக்குச் செய்யும் செயலுக்கு ஒப்பானது. *

# அச்சுவேலி உற்பத்தி நிலையத்துக்கு வெளிநாட்டிலிருந்து தாய்க் கோழிகள்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் கோழிக்குஞ்சு உற்பத்தியை மேற்கொள்வதற்குரிய முட்டைகளைப் பெற தாய்க்கோழிகள் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன. நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இறைச்சியினக் கோழிக்கான தாய்க்கோழிக்குஞ்சுகள் 700 இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளன.

முட்டை இனத்திற்கான தாய் கோழிக்குஞ்சுகள் ஹொலண்டில் இருந்து கொண்டுவரப்படவுள்ளன.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் கைத்தொழிற்பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தின் கோழிக்குஞ்சு உற்பத்திப் பணி அடுத்த வருட நடுப்பகுதிக்கு பின்னர் ஆரம்பமாகலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட கோழிக்குஞ்சுகள் வளர்ந்து அவைகளிடம் இருந்து பெறப்படும் முட்டையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் கோழிக்குஞ்சுகளே பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் என கைத்தொழிற்பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தின் பொறுப்பதிகாரி எஸ்.மலர்வண்ணன் தெரிவித்தார். (ம-11)

# சத்தியகாட்டு சந்தைப் பகுதியில் கட்டாக்காலிகளால் தொல்லை

சுழிபுரம் சத்தியகாட்டு சந்தை மற்றும் தபாற்கந்தோர் சந்திப் பகுதிகளில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதிப்பகுதியில் கட்டாக் காலிகளாகத் திரியும் ஆடு, மாடுகளினால் வீதி விபத்துக்கள் அதிகரிக்கும் சாத்தியம் ஏற்பட்டுள்ளது என்றும் -

சத்தியகாட்டுச் சந்தைப் பகுதியினுள் நுழையும் இந்தக் கால்நடைகள் வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கும் சந்தைக்குவரும் பொது மக்களுக்கும் பல்வேறு அசௌகரியங்களை ஏற்படுத்தி வருவதாகவும் - பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை - வழக்கம்பரை அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள தோட்டங்களுக்குள் செல்லும் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பயிர்களை நாசம் செய்து வருவதாக விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது. (எ-28)

# பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொடுக்க சிறுவர் பாதுகாப்புக்குழு நடவடிக்கை

பிறப்புச் சான்றிதழ் இல்லாத மற்றும் பெற்றோரின் திருமணப் பதிவுச் சான்றிதழ் இல்லாத சிறுவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு முன்வந்துள்ளது. சிறுவர்கள் தமது உரிமைகளுடன் வாழவும் அதன் மேம்பாட்டுக்கும் அவர்களது பிறப்புச் சான்றிதழும் பெற்றோரின் திருமணப் பதிவுச் சான்றிதழும் அவசியமானவை.

இவை இரண்டும் சிறுவர்கள் உரிமைகளுடன் வாழ்வதற்கு மிகமிக அவசியமாகும். எனவே சிறுவர்கள் உரிமைகளுடன் வாழ்வதற்கு நாம் வழிவகுப்போம். எனவே இவற்றைப் பெற்றுக்கொள்ள மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு, அறை இலக்கம் 30, யாழ் போதனா வைத்தியசாலை என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சங்கப் பணியாளரும்
சி.சே.க.உ.கூ.சங்க உறுப்பினருமாகிய
**திரு.சோமசுந்தரம் சோமஸ்கந்தராசா**
அவர்கள் யாழ். மாவட்ட சமாதான
நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு
அவரை அகமகிழ்ந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்.
கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
(25038)(25-11-16)

# இந்திய பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள்



யாழ். புண்ணிய பூமிக்கு வருகை
ஸ்ரீசோட்டாணிக்கரை பகவதி அருள்பெற்ற
ஸ்ரீவெட்டுடைய காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்


**மணிசாமி சாமி**

P.T.R. மீண்டும் வருகை தந்துள்ளார்.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதலில் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வித்தடையா? கடன் தொல்லையா? தொழிலில் முன்னேற்றமில்லையா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக்கியமில்லையா? வெளிநாடு செல்லத்தடையா?

ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள்! உண்மைபுரியும்.

**மணிசாமி சாமி**
54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,
(பழைய லிங்கம் கூல்பார் அருகில்) உல்லாசப்பயணிகள் விடுதி, யாழ்ப்பாணம்.
(25011) (12-21)




JH

**Stationary Stand Fan**

ஜெனரல் இக்விப்மன்ட்ஸ் லிமிடட்
316,400, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2345046, 2327264, 2343822
2343823, 2430799 பக்ஸ்: 2434637.


# தசாக கிருகயக்ஞ அழைப்பு

சுபானு வருஷம் கார்த்திகை மாதம் முதலாம் நாள்
(17.11.2003) திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புத் தந்தையார்
**சிவஸ்ரீ ச.வரதராஜேஸ்வரக் குருக்கள்**
அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள்
கார்த்திகை மாதம் 10 ஆம் நாள் (26.11.2003) புதன்கிழமை - **தசாகம்** காலை 10 மணிக்கும்
கார்த்திகை மாதம் 13 ஆம் நாள் (29.11.2003) சனிக்கிழமை **கிருகயக்ஞமும்** நடைபெறவுள்ளன. மேற்படி கிரியைகளிலும் (29.11.2003) மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*மயிலணி, சுன்னாகம்.* (25042)(34) - அன்பு மனைவி, மக்கள்.

# மாவட்டச் செயலகம்-யாழ்ப்பாணம்

## பாவித்த வாகனத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கான அறிவித்தல்

வாகன இலக்கம் :- 12 சிறீ 211
வாகனத்தின் வகை :- பேர்ஜோ (Peugeot) - 504

மேற்படி வாகனம் 2003-12-11ஆம் திகதி காலை 10.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். வாகனத்தை 04-12-2003ஆம், 05-12-2003ஆம், 09-12-2003ஆம் திகதிகளில் காலை 10.00 மணியில் இருந்து பிற்பகல் 4.00 மணிவரை யாழ். செயலக களஞ்சியக் கிளையில் பார்வையிடமுடியும்.

- ✦ வாகனத்தை ஏலத்தில் கொள்வனவு செய்பவர் ஏற்றுக்கொள்ளப்பட்ட உச்சக் கேள்வித் தொகையின் 25% த்தினை கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.
- ✦ மிகுதி 75% பணத்தினை கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாளோ அல்லது அதற்கு மறுநாளோ செலுத்தி வாகனத்தை செயலக வளாகத்திற்கு வெளியே எடுத்துச் செல்லல் வேண்டும். தவறும் பட்சத்தில் முதலில் செலுத்திய 25% கொள்வனவுப் பணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.
- ✦ இவ்விடயம் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் அறிய வேண்டுமாயின் மேலதிக மாவட்ட செயலாளர் (நிதி) அவர்களுடன் நேரடியாகவோ அல்லது 2222398 இலக்க தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

**செ.பத்மநாதன்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ்ப்பாணம்.**

# மாவீரர்களின் பெற்றோர் இன்று கௌரவிப்பு

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் கல்வி கற்று வீரச்சாவடைந்த முப்பதிற்கு மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு இன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.யாழவன் கலந்துகொள்வார்.

# புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் இலக்கம் 5 விடைகள்

## வினாத்தாள்-1

| | | |
|---|---|---|
| 1. குளத்தின் 2.உறைக்கும் | 3. 2 | |
| 4. 1 | 5. 1 | 6. 1 |
| 7. 4 | 8. 4 | 9. 2 |
| 10. 2 | 11. 2 | 12. 3 |
| 13. 2 | 14. 3 | 15. 2 |
| 16. 3 | 17. 4 | 18. 3 |
| 19. 3 | 20. 1 | 21. C |
| 22. A | 23. B | 24. 3 |
| 25. 1 | 26. ✗ | 27. ✓ |
| 28. ✓ | 29. 5 | 30. 5 |
| 31. 6 | 32. 5 | 33. 47 |
| 34. 3 | 35. 1 | 36. 3 |
| 37. 2 | 38. 31452 | 39. 3 |
| 40. 1 | | |

புள்ளி 40X2 1/2=100

## வினாத்தாள்-2

01. அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
13.11.2003.
இப்படிக்கு தங்கள்
நல்வரவை நாடும்,
ம.தர்மலிங்கம்.
02. செல்வன் த.சுஜீவன்
03. 17:00 மணித்தியாலயம்
04. செல்வன் ப.சேரலாதன்
05. திரு. ம.தர்மலிங்கம்
06. பிற்பகல்
07. ரூபா 4.50 08. ரூபா 16.50
09. தபாற்கந்தோரில்
10. 450.00
11. நானூற்றைம்பது
12. திருகோணமலை
13. கு.கோகுலன்
14. ம.குணசிங்கம்
15. இல.25, மத்திய வீதி, விருதுநகர்.
16. திகதி ம.குணசிங்கம்
17. புல்லாங்குழல் 18. டம்பரவண்டி
19. நத்தை
20. கிளிப்பறவை
21. ரூபா 35.25 22. ரூபா 151.00
23. 100 ரூபா, 5 ரூபா, 2 ரூபா, 1 ரூபா 24. 71 ரூபா
25. 348.75
26. ஏட்ரன்
27. நெருக்கமாகவும்
28. அருவி வெட்டுப்பாடல்
29. சங்கிலித் தையல்
30. கையுறை
31. குறிஞ்சிப்பூ
32. பூஞ்சணம்
33. காபோவைதரேற்றும்மாச்சத்து
34. புரதம்
35. விற்றமின் C
36. வண்ணாத்துப்பூச்சி
37. திமிங்கிலம்
38. மழை பெய்யும்போது
39. குருவிச்சை, பனங்கற்றாளை, ஓக்கிட் 40. நாருருவேர்
41. [illegible]
42. [illegible]
43. [illegible]
44. [illegible]
45. [illegible]
46. செம்மஞ்சள் 47. பச்சை
48. ஊதா 49. சிவப்பு, மஞ்சள், நீலம்
50. சிவப்பு 51. பச்சை 52. கறுப்பு
53. வெள்ளை 54. நிலா 55. நீ
56. தந்தாய் 57. நிசி, கங்குல்
58. சந்தோசம், ஆனந்தம்
59. இருளை 60. நான்
61. Night, 62. You
63. World 64. Light
65. 16m 66. 4/8
67. செங்கோணம்
68. 2 முகங்கள், 2 விளிம்புகள், 0 உச்சிகள்
69. 48m 80 சதுரமீற்றர்
70. கதவு 71. அலுவலகம்
72. தூண் 73. கத்தரிக்காய் 74. தூபம்
74-79 பொருத்தமான கருத்துடைய வசனங்கள்

### புள்ளித் திட்டம்:-

| | | | |
|---|---|---|---|
| 1 - | | ⇨ | 5புள்ளிகள் |
| 2 - | 20 | ⇨X 1= | 19புள்ளிகள் |
| 21 - | 25 | ⇨X 2= | 10புள்ளிகள் |
| 26 - | 64 | ⇨X 1= | 39புள்ளிகள் |
| 65 - | 69 | ⇨X 2= | 10புள்ளிகள் |
| 70 - | 73 | ⇨X 1= | 5புள்ளிகள் |
| 74 - | 79 | ⇨X 2= | 12புள்ளிகள் |
| | | | 100புள்ளிகள் |

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாவற்குழியைச் சேர்ந்தவரும்,
யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை
சிறப்புக் கலை மாணவனும், சைவ சித்தாந்த
பண்டிதரும், இளஞ் சைவப்புலவருமான
**நாகரத்தின ஐயர்**
**கலாதரசர்மா**
அவர்கள் 19.11.2003 அன்று மாவட்ட நீதிபதி திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். அவரது சமூகசேவை மேலும் சிறக்க பாராட்டுவதோடு எல்லாம் வல்ல சபரிமலை ஸ்ரீ ஐயப்பனை வேண்டி நலம்பெற வாழ்த்துகின்றோம்.

- சபரீச ஐயப்ப பக்தன்
ஐ.சிவபாதசுந்தரம் (பச்சை).
(25041)(34 -11-16)

# அறிவித்தல்

**கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதிமுருகன் ஆலய மகாசபை அங்கத்தவர்களை இனங்காணுவதற்கான விண்ணப்பம்**

மேற்படி விடயம் தொடர்பில் 21.07.2003 - 04.08.2003 ஆம் தின உதயன் பத்திரிகையில் கோரப்பட்ட விண்ணப்பத்தினை ஏற்பதற்கான கால எல்லை 2003.12.05ஆம் தினம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பெறுநர்
(வே.நடராசா)
(25049) (11-16)

# மேசன்மார், தச்சு வேலையாளர்கள் தேவை

கோப்பாய் இராசபாதை வீதியில் அமைந்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரி கட்டட வேலைத் தளத்தில் - எமது இரண்டாங்கட்ட கட்டட வேலைக்கு அனுபவம் வாய்ந்த மேசன்மாரும் தச்சு வேலையாளர்களும் அவசரமாகத் தேவை.

தயவு செய்து வேலை நேரங்களில் நேரில் வரவும்.

கட்டட முகாமையாளர்
ICC கொம்பனி, இராசபாதை வீதி,
தேசிய கல்வியியற் கல்லூரி வளாகம், கோப்பாய்.
(25044) (11-16)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு

பிறப்பு 25 - 07 - 1919



இறப்பு 25 - 11 - 2002

**அதிரியான் பேதுரு யாக்கோப்பு**

பதினேழாம் ஆண்டு

பிறப்பு 01 - 06 - 1917



இறப்பு 10 - 05 - 1986

**அதிரியான் பேதுரு யாக்கோப்பு செபமாலை**

"உயிர்ப்பும் உயிரும் நானே! என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வான்"


அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (25.11.2003) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு கோப்பாய் புனித மரியாள் கோயிலில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மேலும் இந்த நிகழ்வில் கலந்து ஆத்மசாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*
(25007)(11-16)
அன்ரனி தாஸ்
குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 02 - 10 - 1965



இறப்பு 26 - 10 - 2003

**அமரர் சண்முகம் யோகராசா**

அன்புடனும் பாசத்துடனும் எமை
அணைத்து வளர்த்த தெய்வமே!
இன்பமெல்லாம் நினைவாக
இணைந்து நின்ற பாச நிலவே!
உன் நினைவால் எம் கண்களை
ஏன் குளமாய் மாற்றி விட்டீர்?
நாம் கண்ணீரில் நனைகின்றோம்
உம் நினைவால் உருகுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.11.2003) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பாற்பண்ணை றோட்,*
*திருநெல்வேலி.* (25043) (25-11-16)
தாய், சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.

## பற்மின்றன் போட்டிகள்

யாழ். வை.எம்.சி.ஏ விளையாட்டு அவையினால் நடத்தப்படும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளில் பற்மின்ரன் (பூப்பந்தாட்டம் ) சுற்றுப்போட்டி நாளை புதன்கிழமை முதல் வை.எம். சி.ஏ ஆடுகளத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9மணி முதல் 12,14 மற்றும் 18வயதுப் பரிவினர்களுக்கிடையிலான போட்டிகளும், 27,28 ஆம் திகதிகளில் மாலை 3 மணி முதல் 16வயதுப்பிரிவினருக்கான போட்டிகளும், எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9மணி முதல் திறந்த போட்டிகளும் நடைபெறுமென போட்டி இணையாளர் தெரிவித்துள்ளார்.

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை அதிபர்
**உயர்திரு.சிவப்பிரகாசம் சிவகணேசசுந்தரன்** அவர்கள்
24.11.2003 அன்று உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு.எஸ்.வரதராஜா அவர்களின் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையிட்டு இவரது சமூகப்பணி மேலும் சிறக்கவேண்டுமென அகமிக மகிழ்ந்து மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

-பாடசாலைச் சமூகத்தினர்.

*யா/சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலை.*

(25052)(32-16-18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிலைய ஆசிரியர் நாகரட்ண ஐயர் கலாதரசர்மா அவர்கள அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு யாழ் மாவட்ட நிதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவருடைய சமூக சேவைகள் மேலும் வளர வாழ்த்துகின்றோம்.



நியூசன் கல்வி நிலைய நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்.

கைதடி (C-31474) (32-16-18)

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் எம்.சீ. அருந்தவச்செல்வம்**

(முன்னாள் யாழ்ப்பாணம் உதவித்தேர்தல்கள் ஆணையாளரும் தற்போதைய பிரதித் தேர்தல்கள் ஆணையாளரும்



நிர்வாகத்தின்
கம்பீரம்;
தீர்க்கதரிசனமான
ஆலோசனைகள்;
சிக்கல்களில்
சட்டென்றுவரும்
தீர்ப்புக்கள்;
கடினமான
அந்த நாள்களிலும்
கலங்கி விடாத
உறுதி;

உங்கள்
திறமை
பதவியை
அலங்கரித்தது.
அன்பு,
தந்தையாய்
எம்மை
அரவணைத்தது

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதவித் தேர்தல்கள் ஆணையாளரும்
அலுவலர்களும்,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C-31473)(32-16-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில் 18 - 03 - 1934



விண்ணுலகில் 26 - 10 - 2003

### திருமதி இரத்தினம் பரமேஸ்வரி

எங்களுக்காய் ஒளிர்ந்த குல விளக்கே!
பொலிந்த மேனியும் நெடிதுயர் தோற்றமும்
மலிந்த புன் சிரிப்பும் மாசறு வாய்மையும்
வெள்ளை உள்ளமும் வெளிப்படைப் பேச்சும்
கள்ளமில்லா நெஞ்சமும் கனிவான பார்வையும்
வந்தாரை வரவேற்று வாய் மலரும் முகமும்
அன்பினால் சிறந்து பண்பினால் உயர்ந்து
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமியே! உன்னை
மின்னாமல் முழங்காமல் காலனவன் கவர்ந்திட்டானோ?
நீ மறைந்து மாதமொன்றாகியும் மாறவில்லையே
ஆறவில்லையே எம் துயர்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*47, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை.*

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(25050) (32-16-18)

## சமய சந்நிதியில்

சுழிபுரம்,நவ.25

மூளாய் ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

நேற்றுக்காலை 5.30 மணியில் இருந்து கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் எண்ணெய்க்காப்பு சாத்துதல இடம்பெறும். (எ-10-28)

## ஒளிவிழாக்கள்

சண்டிலிப்பாய்,நவ.25

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியின வருடாந்த ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கிறிஸ்தவ மாணவர் மன்ற தலைவி செல்வி என்.நிமல்சி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம அதிதியாக கியூடெக் நிறுவன உயர்ப்பூட்டல் குழுத தலைவர் எஸ்.யோசப் பாலா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட் திரு. ம.பெ.ஞானரத்தினம் அடிகளார் ,பண்டத்தரிப்பு திருச்சபை போதகர் வண.பத்மதயாளன் ஆகியோா கலந்துகொள்வர். (எ-135)

* * *

யாழ்ப்பாணம்,நவ.25

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஆசிரியர் ஜெ.ஜெய மோகன தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வணபிதா.எஸ்.இம்மானுவேல் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ் லாஸ்ும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-10)

**U.K.; CANADA ; AMERICA**
ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு ஆசையா?

- Canada Immigration Visa Application Form
- U.K. Visa Application Form
- U.S.A. Green Card

என்பவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களை,
பூபாலசிங்கம் புத்தக சாலையிலும் ஏனைய பிரபல்யமான புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஞானம்ஸ்
கைதடி தெற்கு, கைதடி
☎0777 164613

(25046)(32-16-18)

**நாகம்ஸ்** சுன்னாகம்



பார்த்திபன் கனவு
(ரீலீஸ்)

(C/31060)(12)

**நிறைஞ்சனாஸ்** சாங்கானை

இன்று முதல்
சிவாஜி, அர்ஜுன மற்றும் பலர் நடிக்க
மன்னவரு சின்னவரு (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
GET CARTER

(C-31350) (12)

**லஷ்சுமி சினிமா** இணுவில்

ரஜனி, மீனா,
கவுண்டமணி, சேந்தில் நடித்த
எஜமான் (ரீலீஸ்)
10.30, 2.30, 6.30. (பு.நே.)

(25000) (12)

**லிபேட்டி** அச்சுவேலி



விஜய், ஜோதிகா நடித்த
குஷி (ரீலீஸ்)
தினசரி.: 3.00, 7.00. (பு.நே)

(C/31231)

**ராஜா** யாழ்ப்பாணம்

அஜித், மீராஜஸ்மின், கபாலி
மற்றும் பலர் நடித்த
ஆஞ்சநேயா (ரீலீஸ்)
காட்சிகள்:10.30,2.30,6.30,9.30(பு.நே.)

(C-30904)(12)

## தமிழ் இலக்கியத் தேடல் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்.குடாநாட்டில் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய தேடல் தொடர்பாக இலக்கிய ஆய்வு மன்றம் நடத்தும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் யாழ்.குடாநாட்டில் உள்ள பிரபல எழுத்தாளர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை ஒய்வு பெற்ற நிர்வாக சேவை உத்தியோகத்தர் கே. திருலிங்கநாதன் மேற்கொண்டுள்ளார். (எ-8)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எட்வேட் றீற்றா (சங்கானை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எட்வேட் றீற்றா 24.11.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஞானப்பிரகாசம் எட்வேட் (பிரபல வர்த்தகர், சங்கானை, 'அன்னம்ஸ்', றீற்றா எண்ணெய் ஆலை உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், றொபேட் கென்னடி ( சுவிஸ்), ஜரின் (ஜேர்மனி), மரியசிறோமி ஆகியோரின் அன்புத் தாயாரும் குயின் (ஜேர்மனி), பாஸ்கரன் (ஜேர்மனி), அல்வின் பற்றிக் ஆகியோரின் அருமை மாமியாரும் ஜெனிபர், டினான், டொரின், றொசான், ஜனா ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'அன்னம்ஸ்' சங்கானை.* (சி-31476)(11-16-32)

தகவல்: ஞா.எட்வேட் (கணவர்)

### ஐயாத்துரை சின்னராசா

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சின்னராசா அவர்கள் திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை-நாகம்மா தம்பதிகளின் புதல்வனும் கந்தையாபிள்ளையினதும் காலஞ்சென்ற கண்மணியினதும் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேதநாயகம், இராசநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஸ்ரீஸ்காந்தராசா, ஸ்ரீஸ்காந்தரூபி (ஜேர்மனி), ஸ்ரீரஞ்சினி (கனடா), யசோதரை (கனடா), காஞ்சனா (கொழும்பு), குமுதினி (ஜேர்மனி), வினோதினி (பிரான்ஸ்), சிவராசா (சுவிஸ்), மைதினி (கனடா), கஜனி (பிரான்ஸ்), ஸ்ரீசங்கர் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியா, ஆனந்தசெல்வன் (ஜேர்மனி), நகுலேந்திரன்(கனடா), நவரட்ணராசா (கனடா), சூரியகாந்தன் (கொழும்பு), திசோ (ஜேர்மனி), தயாளன் (பிரான்ஸ்), பாநிதி (சுவிஸ்), சுதர்சன் (கனடா), பிரபாகரன், ஜெனனி ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரித்தி, ஷன்யா, மெளலிகா, ஜெலிஷா, ஜெனு, மேனன், ஷஜன், சோபோன், கிருஷ்ணபிரியா, பிரசன்னா, மிலேனி, கௌதம், கெளஷான், கௌஷிகா, வினோத், அனுஜன், ஆகாஷ், ஆர்த்தி, சங்கவி, கீர்த்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கல்வியங்காடு* (25053)(11-16-32)

தகவல்:- ஸ்ரீஸ்காந்தராசா (சிறி)

### கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்)

நெட்டிலிப்பாய், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம் 24.11.2003இல் காலமாகிவிட்டார். அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு.* (25056)(11-16-32)

தகவல்: க.ஞானசேகரம் (சகோதரன்)

### திருமதி நல்லம்மா செல்லத்துரை

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி நல்லம்மா செல்லத்துரை அவர்கள் நேற்று (24.11.2003) திங்கட்கிழமை அதிகாலை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் செல்லப்பா செல்லத்துரையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் செந்தில்வாணி (ஜேர்மனி), செந்தில்செல்வி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவரட்ணராகா, சுரேஷ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் சமரன், மகிழினி (கனடா), சமரி (ஜேர்மனி) ஆகியோரின பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2003) புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

*கலையகம், மானிப்பாய் வீதி, உடுவில்.* (25055)(11-16-32)

தகவல்: செ.செல்லத்துரை (கணவர்)

### சிவப்பிரகாசம் கனகசபாபதி (குருசாமி)

புங்குடுதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புளியங்கூடலில் வசித்தவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய சிவப்பிரகாசம் கனகசபாபதி அவர்கள் 23-11-2003 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குருமூர்த்தி, சாஸ்திரியார், இராமாசிப்பிள்ளை, நாகமணி, நாகமுத்து அவர்களின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம், சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் இராசம்மாவின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன், ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் லக்சுமி, மதனலோஜினி (மாலா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்சினி, நிஷாந்தி, கிரிஸ், பானுஷா, கிருசான் ஆகியோரின் அன்புப் பேரனும இரத்தினசபாபதி (ஓய்வுபெற்ற அதிபர்), சிவக்கொழுந்து, பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமேனிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை), செல்லத்துரை, மரகதம்பிள்ளை, பூரணம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் வசந்தியின் (ஆசிரியை) சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-11-2003) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல.30, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (25048)(11-16-32)

தகவல்: சி.இரத்தினசபாபதி (சகோதரன்)

# மாவீரர் தினநிகழ்வு வன்முறையற்ற நடவடிக்கை அதற்கு படையினர் இடையூறு ஏற்படுத்தக்கூடாது!

## காங்கிரஸ் கட்சி வெளியிட்ட அறிக்கையில் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ.25

மாவீரர் நாள் நிகழ்வுகள் வன்முறையற்ற சமாதான முறையிலான அரசியல் நடவடிக்கைகள் ஆகும். ஆகவே, அந்நிகழ்வுகளை நடத்துவதற்கு இடையூறுகளை ஏற்படுத்துவதை அரச படையினரும் பொலீஸாரும் தவிர்த்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி கேட்டுள்ளது.

இது தொடர்பான அக்கட்சியின் தலைவரான அ.விநாயகமூர்த்தியும் உபதலைவரான சி.வி.கே.சிவஞானமும் கூட்டாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

தமிழ் மக்கள் மாவீரர் எழுச்சி நாள்களை மிகவும் அமைதியான முறையில் அனுஷ்டித்து வருகின்றனர். இச்சமயத்தில் அரச படையினரும் பொலீஸாரும் வேண்டுமென்றே மிகவும் கவலைக்கிடமான முறையில் நடந்துகொள்வதை அவதானிக்க முடிகிறது.

பொது மக்களும் விடுதலைப் புலிகளும் மிகவும் அவதானத்துடனும் பொறுமையுடனும் இந்த விடயங்களைக் கையாண்டு வருகின்றனர்.

எனினும் படையினரில் சிலர் மாவீரர் தினத்திற்கென அமைக்கப்பட்ட கொடிகளை அகற்றியும் வளைவுகளை சேதப்படுத்தியும் வருகின்றனர்.

இவற்றிற்கு சிகரம் வைத்தாற்போல சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பணிமனைக்கு முன்பாக நிறுவப்பட்ட வளைவை தமது வாகனத்தால் படையினர் இடித்து அகற்றியுள்ளனர்.

அப்பணிமனையில் இருந்த மாணவர்களைத் தாக்கியும் உள்ளனர். அத்துடன், அப்பணி மனைக்குள் அத்துமீறி பிரவேசித்து நள்ளிரவில் சோதனை நடத்தியும் உள்ளனர். இந்த நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கவை.

மாவீரர் நாள் நிகழ்வுகள் வன்முறையற்று சமாதான முறையிலான அரசியல் நடவடிக்கை என்பதால் இவ்வாறான இடையூறுகளை ஏற்படுத்துவதை அரச படையினரும் பொலீஸாரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என வேண்டுகிறோம் என்று அதில் உள்ளது. (ஓ-3)

## சமாதானப் பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஆலோசனைகளை எதிர்ப்பதற்கோ அல்லது ஆத்திரம் அடைவதற்கோ எந்தவித காரணமும் இல்லை. 1995ஆம் ஆண்டில் ஜனாதிபதி முன்வைத்த "பிராந்திய கவுன்ஸில்" திட்ட யோசனையில் புலிகளின் ஆலோசகைகளில் பெரும்பாலானவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பிராந்திய அரச சேவை ஆணைக் குழு ஒன்றை அமைப்பதன் மூலம் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்கக முடியும் என்றும் ஜனாதிபதி தனது ஆலோசனையில் குறிப்பிட்டிருந்தார். புலிகளின் ஆலோசனைகளில் பெரும்பாலானவற்றை அன்று அங்கீகரித்த ஜனாதிபதி இப்போது எதிர்ப்பது ஏன் என்பதுதான் புரியாத புதிராக இருக்கின்றது.

அன்று ஜனாதிபதியின் அணுகுமுறைதான் தவறிவிட்டது. புலிகள் தன்னிச்சையாக நான்கு மாதங்கள் யுத்தநிறுத்தம் செய்தபோது யுத்த நிறுத்த காலத்தில் நோர்வே அனுசரணையாளர் புலிகளைச் சந்திக்கச் செல்கையில் அவருடைய வாகனம் தாக்கப்பட்டது. தமிழ்ச்செல்வன் உட்பட பலர் காயமடைந்தனர். புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

அரச படையினரின் அடாவடித்தனமான செயல்களினாலேயே வடக்கு பிராந்தியத்தில் ஆண், பெண், சிறுவர் என்று பல்லாயிரம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பல லட்சம் பேர் அகதிகளாகினர்.

புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் அதிகமாக இருக்கலாம் அது குறித்து பேச்சு மூலம் பேசித் தீர்க்க முடியும்.

அரசமைப்பை காரணம் காட்டி புலிகளின் ஆலோசனைகளை நிராகரித்துவிடமுடியாது. காரணம், இன்றைய அரசமைப்பை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதில் தமிழர்களின் பாரம்பரியம், அபிலாஷைகள், சமஷ்டி முறை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

எனவே, உடனடியாக சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்படவேண்டும். ஜனாதிபதியும் பிரதமரும் யதார்த்த நிலையை உணரவேண்டும். இருவரும் பொறுப்புடன் செயல்படவேண்டும்.

தனி அதிகாரத்துடன் ஒருவர் சமாதானப் பேச்சுக்களைப் பொறுப்பேற்க வேண்டும். அப்போதுதான் ஒரு தீர்வு ஏற்படும். இரண்டு தோணியில் கால வைத்து குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாது.

புலிகளின் ஆலோசனைகளில் வடக்கு - கிழக்கு வாழ் சிங்கள, முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவமும் அவர்களின் அடிப்படை உரிமைகளும் அபிலாஷைகளும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே அதைப் பற்றி அலட்டிக்கொள்ளவோ, சந்தேகப்படவோ வேண்டிய அவசியம் இல்லை. பல இனங்கள் வாழும் இப்பிராந்தியத்தில் அனைவரும் ஐக்கியத்துடன் வாழவேண்டும் என்பதே புலிகளினதும் தமிழ் மக்களினதும் அவா.

இலங்கை, பல்தேசிய இன மக்கள் வாழும் நாடு. அதேபோன்று வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் பல்லின மக்கள் வாழ்கின்றனர்.

நாம் வன்முறையற்ற வகையில் முன்வைத்த கோரிக்கைகள் யாவும் நிராகரிக்கப்பட்டன. அதன் காரணமாகவே ஆயுதப்போராட்டம் வெடித்தது. அதற்கு வித்திட்டவர்கள் தென்பகுதி அரசியல் தலைவர்கள்தான். ஆயுத பலத்தின் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை இப்போது அவர்கள் உணர்ந்துவிட்டனர்.

தமிழ் தேசியத்தின் பாரம்பரியம், இறைமை ஐக்கிய இலங்கைக்குள் பாதுகாக்கப்படவேண்டும். உள்ளக சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும். யுத்தம் நிரந்தரமாக நிறுத்தப்படவேண்டும். நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். அகதிகளாக இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறவேண்டும். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். நாட்டைப் பிரித்துக் கேட்கவில்லை.

அதேவேளை, தொடர்ந்தும் தமிழர்கள் இங்கு இரண்டாம் தர பிரஜைகளாக வாழ விரும்பவில்லை. எனவே மேலும் காலம் கடத்தாமல் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

பேச்சுக்கள் தாமதப்படும்போது தமிழ்மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை சீரழிந்துவிடும். அதனால், ஏற்படும் பாதிப்புகள் விபரீதமாகவே அமையும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

## கிண்ணியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. பிந்திக்கிடைத்த தகவல்களின் படி படுகாயமடைந்தவர்களில் ஒருவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தில் லொறிக்கு சேதம் ஏற்படவில்லை. காயமடைந்தவர்களை லொறிச் சாரதியே வைத்தியசாலையில் சேர்த்தார் என்று கூறப்படுகிறது.

இச்சம்பவம் கிண்ணியா கச்சக் கொடித்தீவு என்ற இடத்தில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தையடுத்து பொலீஸ், இராணுவப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியாவில் நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காக திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், சீனன்குடா பொலீஸ் அதிகாரி கிளெமண்ட் பெர்ணாண்டோ ஆகியோர் நேற்றுக் காலை அங்கு விரைந்தனர்.

## ஒரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரஸ்தாப வாகனத்தைப் பரிசோதனை செய்த வாகனப் பரிசோதகரின் அறிக்கைப் படி இந்த வாகனத்தில் 52 சதவீத பிறேக் மட்டுமே இருந்திருக்கிறது. சாதாரண வாகனத்தில் 80 சதவீத பிறேக் இருக்க வேண்டும். இது தொடர்பாக குற்றப் பத்திரத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறினார்.

இந்த ஆட்சேபத்தை ஆராய்ந்த நீதிவான், பொலீஸார் தாக்கல் செய்த குற்றப்பத்திரத்தை நிராகரித்து, திருத்தப்பட்ட குற்றப்பத்திரத்தை எதிர்வரும் 5ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு அவர்களுக்கு உத்தரவிட்டார்.

இராணுவத் தரப்பில் ஆஜரான சட்ட ஆலோசகர் கப்டன் குறூப்பு, சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை விடுவிக்குமாறு நீதிவானிடம் விண்ணப்பித்தார்.

இந்த விண்ணப்பத்தை ஆராய்ந்த நதிவான் இராணுவ வாகனத்தை ஐந்து லட்சம் ரூபா பிணையில் எடுத்துச் செல்ல அனுமதித்தார்.

மோட்டார் சைக்கிளை 80 ஆயிரம் ரூபா பிணையில் எடுத்துச் செல்லவும் நீதிவான் அனுமதித்தார். (ஓ-3-5)

## யாழ். எவ்.எம். வானொலியில் கருத்துக்களம்

யாழ்ப்பாணம்,நவ.25

எதிர்வரும் ஜி.சீ.ஈ (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி கருத்துக்களம் என்ற நிகழ்ச்சி யாழ். எவ்.எம். வானொலி மூலம் நேற்று முதல் ஒலிபரப்பப்படுகிறது.

வடமாகாண அதிபர் சங்கத்துடன் யாழ். மத்தியகல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் லியோ கழகங்கள் இணைந்து நடத்தும் இந்த நிகழ்ச்சி யாழ். மத்திய கல்லூரியில் இருந்து ஒலிபரப்பப்படுகிறது.

எதிர்வரும் 30ஆம் திகதி வரையும் இரவு 9.30 மணிமுதல் இரவு 10.30 மணிவரை இடம்பெறும் இந்நிகழ்சியில் தினமும் ஒவ்வொரு பாடம் தொடர்பாக விளக்கமளிக்கப்படும்.

மாணவர்கள் பாடம் தொடர்பான சந்தேகங்களை தொலைபேசி மூலம் கேட்கலாம்.

## திருநெல்வேலி சம்பவத்துக்கு இ.தொ.காங்கிரஸ் கண்டனம்

திருநெல்வேலியில் மாவீரர் நினைவாக கட்டப்பட்ட அலங்கார வளைவு படையினரால் இடித்துச் சேதமாக்கப்பட்டதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக இ.தொ.கா பிரதித் தலைவர் எம்.எஸ்.செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அரசியல் ஸ்திரமற்ற ஒரு நிலைமை காணப்படும் இச்சூழலில் படையினர் இவ்வாறு நடந்துகொண்டமை ஓர் இலட்சியப் பயணதனை மேற்கொள்ளும் விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரத்தை மேலும் பெருக்கும் செயலாகும். ஆத்திரமும் ஆவேசமும் கூடும்போது நிலைமைகள் மோசமாக இடமுண்டு.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி தற்போது பொறுப்பேற்றுள்ளார். அத்தகைய நிலைமையில் இவ்வாறு அட்டகாசம் நடத்தப்படுவதை எவரும் மன்னிக்கமுடியாது.

அலங்கார வளைவு இடித்துச் சேதமாக்கப்பட்டமை மட்டுமின்றி தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தைச் சுற்றி வளைத்த பொலீஸார் மாணவர்களை கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதுவும் சிறந்த செயல்லல.

எனவே, ஜனாதிபதியும் பிரதமரும் இத்தகைய நிகழ்வுகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அவர் கேட்டுள்ளார்.

## ராணுவ பஸ் - சைக்கிள் விபத்தில் ஒருவர் காயம்!

கரவெட்டி,நவ.25

பருத்தித்துறை, மந்திகைச் சந்திப் பகுதியில் இராணுவத்தினரின் பஸ்ஸும் சைக்கிள் ஒன்றும் மோதிக் கொண்டதில் சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 3.10 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் அல்வாயைச் சேர்ந்த எஸ்.இராஜரட்ணம் (வயது 58) என்பவரே காயமடைந்தார். அவர் பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்கு வந்த பருத்தித்துறை பொலீஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-70)

## மட்டக்களப்பில் கண்ணிவெடிகள் அகற்றும் பணி

கொழும்பு,நவ.25

மட்டக்களப்பில் நிலக்கண்ணிகளை அகற்றும் பணிகள் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பிரிட்டன் மிதிவெடி அகற்றும் நிறுவனம் இந்தப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக இது தொடர்பான ஆரம்ப கட்டப்பணிகளில் இந்நிறுவனம் ஈடுபட்டுவந்தது.

சுமார் 37 கிராமங்களில் மிதிவெடி அபாயம் உள்ளதாகவும் அவற்றில் 20 கிராமங்கள் முன்னுரிமை அடிப்படையில் மிதிவெடிகள் அகற்றப்பட வேண்டிய கிராமங்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று வட்டக்கிராமத்தில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. (ஓ-9)

## உலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருகோடியே 50 லட்சம் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா கடந்த செப்ரெம்பர் வரை 32 ஆயிரத்து 734 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சமய நிறுவனங்களுக்கான கொடுப்பனவுகளும், காணாமற் போனோர் மற்றும் இறந்தவர்களின் உறவினர்களுக்கு வழங்கப்படும் நஷ்டஈடுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

- இவ்வாறு உலகவங்கியின் இலங்கை பிரதிநிதி அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஓ-3)

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடி ஏற்றப்பட்டு மாலை 6 மணிக்கு இறக்கப்படும். மீண்டும் நாளை மறுதினம் காலை ஏற்றப்படும்.

தேசியக்கொடி, மாவீரர் நாள் நிறைவடைந்ததும் இறக்கப்படும்.

இதேசமயம், பொது நிறுவனங்கள், பாடசாலைகள் போன்றவற்றில் இன்றும், நாளையும், நாளைமறுதினமும் காலை ஏற்றப்படும் தேசியக் கொடி பிற்பகல் 12.01 மணிக்கு பின்பாகவும் மாலை 06 மணிக்கு முன்பாகவும் இறக்கப்படும்.

மாவீரர் நாளையொட்டி, மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும் மரநடுகை நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன.

(ஓ-5-9-51-70-72-74-135-173)

## உடுபுடைவைகள் கையளிப்பு

நெடுந்தீவு,நவ.25

தீபாவளி தேசிய கொண்டாட்டத்தை முன்னிட்டு நெடுந்தீவை சேர்ந்த 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்துகலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட உடுபுடைவைகளை நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ். பேரானந்தன் சம்பந்தப்பட்டவர்களிடம் கையளித்தார். (எ-11)

## பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிக் கொண்டிருந்த சமயம் திடீரென மயக்கம் அடைந்தார் என்றும் -

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சத்திர சிகிச்சைக்கு உட்படுந்தப்பட்டார் என்றும் -

சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுக்காலை 7 மணிக்கு அவரது உயிர் பிரிந்தது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

அவரது இறுதிக்கிரியைகள் நாளை கொட்டாஞ்சேனையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

இவருக்கு மனைவி இரு பிள்ளைகள் உள்ளனர். (ஓ-3)

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 29.11.2003 இற்கு முன் நேரில்

பாடசாலை மாணவர்களுக்கு!
விடுமுறைக்கான கணனிப் பயிற்சி நெறி
ஆரம்பம்: 29.11.2003 காலம்: 1 1/2 மாதம்
மேலதிக விவரங்களுக்கு
Soft View Computer College
Jaffna, Sri Lanka.
www.arammenporulagam.com arammenporulagam@eth.net
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P.: 021 222 - 5170
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India. T.P.:+91 - 44 - 4891286.

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
A/L 2005 PHYSICS
ஒளியியல் MON. 6.30 a.m.
நீர்நிலையியல் WED. 4.00 p.m.
★ By: ஜெயசீலன்
ஆரம்பம்:26-11-2003 WED. 4.00 p.m.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.